ABINAVA ANGILA

(Second Volume)

BY

V. S. KRISHNASAMY AIYAR,

AUTHOR OF

GENERAL KNOWLEDGE & SPECIAL TEST SANGRAHAM.

ANDHI SECONDARY
TIRUCHY-PT.
No.
Date..............
RAYAVARAM.

FIRST EDITION.

அபிநவ ஆங்கில போதினி

(இரண்டாவது வாலியூம்)

இஃது

பொது அறிவு, ஸ்பெஷல் டெஸ்ட் சங்கிரஹம் என்னும்

கிரந்தங்களின் ஆசிரியராகிய

V. S. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களால்

இயற்றப்பட்டது.

முதலாவது பதிப்பு.

St. Joseph's Industrial School Press, Trichinopoly.

Price: 10 Annas.] 1917. [V. P. Charge: 2 Annas.

All Rights Reserved.

நோட்டீஸ்.

திருநெல்வேலி ஜில்லா விளாத்திகுளம் V. S. K. சுவாமி அன்சன்ஸ் புஸ்தகசாலையில் விற்பனைக்குத் தயாராயிருக்கும் புஸ்தகங்கள்.

1. **கி. மு. ஸ்பெஷல் டேஸ்டு வினவிடை :—** இதில் கிராம முன்சீபு சட்டப்பரீட்சை பாஸ் செய்வதற்கு வேண்டிய கிராம அதிகாரங்கள், கிராம சுகாதாரம் முதலியவைகள் அடங்கியிருக்கின்றன. ஷெ பரீட்சைக்கு இதைக்காட்டிலும் இலகுவான முறையில் படிக்க வேறு புஸ்தகமில்லை. இதன் விலை அணு 8.

2. **கி. மு. ஸ்பெஷல் டேஸ்டு அனுபோக முறை:—** கி. மு. சட்டப்பரீட்சை பாஸ் செய்த மாணுக்கர்கள் பிற்காலத்தில் ஒரு கிராமத்தின் தலைவராக நியமிக்கப்படும் காலத்தில் கிரிமினல் சிவில், விவகாரங்களை எவ்வாறு நடத்தவேண்டுமென்ற முறையை அனுபோகத்தில் காட்டும்பொருட்டு எல்லா விஷயங்களுக்கும் மசுமதாக்கள் கொடுத்திருப்பதோடு அவைகள் சம்மந்தமாய் விசேஷக் குறிப்புகளும், செக்ஷன்களும், கொடுக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி புஸ்தகம் இதுவரை வெளிவந்தது கிடையாது. இதன் விலை அணு 10.

3. **கி. மு. ஸ்பெஷல் டேஸ்டு பரீட்சை சோதனை வினக்கள் விடைகளுடன் :—** இப்புஸ்தகமானது கி. மு. ஸ்பெஷல் டெஸ்டு பரீட்சைக்குத் தயார்செய்யும் மாணுக்கர்களின் உபயோகத்திற்காகத் தயார்செய்யப்பட்டுள்ளது. இதில் பலமாதிரியான கேள்விகளும், அதற்கு விடைகள் இம்மாதிரி எழுத வேண்டுமென்ற விபரங்களும் தெளிவாய்க் காட்டப்பட்டிருக்கின்றன. தவிர பரீட்சைக்குப் போகும் மாணுக்கர்கள் தாங்கள் கேள்விப்பேப்பர் வாங்கியவுடன் கவனிக்கவேண்டிய விஷயங்களும் விடைகள் எழுதுமுன்னால் கவனிக்கவேண்டிய விஷயங்கள் இன்னின்னதென்றும் விபரமாய்க்கூறியிருக்கிறோம். இப்புஸ்தகமானது ஆரம்ப மாணுக்கர்களுக்கு மிகவும் பிரயோஜனமானது. இதன் விலை அணு 4.

4. **கர்னம் ஸ்பெஷல் டேஸ்டு வினவிடை :—** இதில் கர்னன் பரீட்சைக்கு வேண்டிய வில்லேஜ் மானியூல், கிராம அதிகாரங்கள், ஸ்கொயருட் கணக்குகள் ; மென்சுரேஷன், தஸ்தாவேஜுகள் எழுத மாதிரி நமூனுக்கள், முதலியவைகள் சேர்ந்திருக்கின்றன. இதன் விலை அணு 8.

ABINAVA ANGILA BODINI

(Second Volume)

BY

V. S. KRISHNASAMY AIYAR

AUTHOR OF

GENERAL KNOWLEDGE & SPECIAL TEST SANGRAHAM

FIRST EDITION.

அபிநவ ஆங்கில போதினி

(இரண்டாவது வாலியூம்)

இஃது

பொது அறிவு, ஸ்பெஷல் டெஸ்ட் சங்கிரஹம் என்னும்

கிரந்தங்களின் ஆசிரியராகிய

V. S. கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்களால்

இயற்றப்பட்டது.

முதலாவது பதிப்பு.

St. Joseph's Industrial School Press, Trichinopoly.

Price: 10 Annas.] **1917.** **[V. P. Charge: 2 Annas.**

All Rights Reserved.

முகவுரை.

இவ்வொருவரும் தங்கள் கருத்தை வார்த்தைகளாலும், வாக்கியங்களாலும் வெளிப்படுத்துகிறார்கள். பொதுவாய் தமிழ் நாட்டிலுள்ளோர்க்கு தாய்பாஷை தமிழானதால் இலக்கணத்தின் அம்சம் இன்னதென்றறியாமலே நாளடைவிலேற்படும் வழக்கத்தின்பேரிலும், அநுபோகத்தின்பேரிலும் தமிழ் பாஷையை நன்றாய்ப் பேசவும் எழுதவும் சாத்தியமாகிவிடுகின்றது. ஆனால் இங்கிலீஷானது நமக்கு அந்நிய பாஷையானதால் இங்கிலீஷ் இலக்கணத்தின் தன்மை இன்னதென்றறியாமலே பேசவாவது எழுதவாவது முடியாது. ஆகையால் ஆரம்ப மாணுக்கர்களுக்கு அநுகூலமாய் இங்கிலீஷில் ஆட்பெயர், ஊர்ப்பெயர், தந்தி சமாசாரங்கள் முதலியவைகளை அதிசீக்கிரத்தில் கற்றுக்கொள்ளும்படியான முறையில் ஆங்கில போதினி 1-வது வாலியத்தை நாம் எழுதினேம். அத்தகைய புஸ்தகமானது பொது ஜனங்களுக்கு மிகவும் திருப்தியைக் கொடுத்துக்கொண்டுவருகிற விஷயமறிந்து பின்னும் விசேஷமாய் இலக்கணத்தின் அம்சங்களைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு இந்த இரண்டாவது வாலியத்தை பிரசுரம் செய்யத் துணிந்தோம். ஆகையால் இதில் ஏதேனும் குற்றங்களிருந்தால் அதை எடுத்துக் காட்டுவதுடன் இதன் சீர்திருத்த விஷயமாய் அறிய மாதிரிகள் அனுப்பும் நண்பர்களுக்கு அன்பார்ந்த வந்தனமளிக்கத் தயாராயிருக்கிறோம்.

விளாத்திகுளம்,
1—2—17.

V. S. K.

அட்டவணை.

பக்கம்.

1. Noun—பெயர்ச்சொல் 2
2. Adjective—ெ. ய[illegible]ச்சொல் 15
3. Pronoun—பிரதிப்பெயர்ச்சொல் ... 19
4. Verb—வினைச்சொல் 22

   Active and Passive Voice—செய்வினை செயப்பாட்டுவினைப்பிரயோகங்கள் ... 48

   Sentences Connected by Relative Pronouns—சம்பந்தப் பிரதிப் பெயரெச்ச வாக்கியங்கள் 62

   Negative Relative Verbal Forms—எதிர் மறைப் பெயரெச்சம் 71

   Participles—வினையெச்சம் 72

   Negative Dependent Verbal Form—எதிர்மறை வினையெச்சம் 76

   Imperative—ஏவல் 76

   Verbal Noun—தொழிற்பெயர். ... 77

5. Adverb—வினையுரிச்சொல் 78
6. Preposition—உருபிடைச்சொல்.. ... 85
7. Conjunction—கூட்டிடைச்சொல். ... 88
8. Interjection—வியப்பிடைச்சொல்... ... 99
9. Formation of Sentences—வாக்கியங்களின் அமைப்பு 100

ABINAVA ANGILA BODINI.

(Second Volume.)

அபிநவ ஆங்கில போதினி.

(2-வது வாலியூம்.)

இங்கிலீஷ் இலக்கணத்திலுள்ள சொற்களும் அவைகளுக்குச் சரியான தமிழும் அடியில் வருமாறு :

1.	Noun	பெயர்ச்சொல்
2.	Adjective	பெயருரிச்சொல்
3.	Pronoun	பிரதிப்பெயர்ச்சொல்
4.	Verb	வினைச்சொல்
5.	Adverb	வினையுரிச்சொல்
6.	Preposition	உருபிடைச்சொல்
7.	Conjunction	கூட்டிடைச்சொல்
8.	Interjection	வியப்பிடைச்சொல்

மேலே காட்டியிருக்கும் எட்டுவிதமான சொற்களில் ஒவ்வொன்றைப்பற்றியும் விரிவாக அடியிற் கூறுகிறோம்.

NOUN.—பெயர்ச்சொல்.

பொருளின் பெயரைக் காட்டுவது பெயர்ச்சொல்லாகும். பெயர்ச்சொற்களில் 5 மாதிரிகள் உண்டு. அவைகளின் விபரம் பின் வருமாறு:

உதாரணம் 1.

1. I went to Madras.
   நான் சென்னைக்குப் போனேன்.
2. He called Krishna.
   அவன் கிருஷ்ணனைக் கூப்பிட்டான்.
3. We started for Benares.
   நாங்கள் காசிக்குப் புறப்பட்டோம்.
4. They met Govindan.
   அவர்கள் கோவிந்தனை சந்தித்தார்கள்.

குறிப்பு:—மேற்கண்ட வாக்கியங்களில் Madras, Benares முதலிய ஊர்ப்பெயர்களும், Krishna, Govindan என்னும் ஆட்பெயர்களும் *Proper Noun* (சிறப்புப்பெயர்)-களாகும்.

உதாரணம் 2.

1. He purchased a book.
   அவன் ஒரு புஸ்தகம் வாங்கினான்.
2. I saw the man.
   நான் மனிதனைக் கண்டேன்.
3. They left the country.
   அவர்கள் நாட்டை விட்டார்கள்.

4. I shot the tigers.
நான் புலிகளைச் சுட்டேன்.

குறிப்பு :—மேற்கண்ட வாக்கியங்களில் book, man, country, tigers முதலியவைகள் *Common Noun* (பொதுப்பெயர்)-களாகும்.

உதாரணம் 3.

1. He was enlisted in the army.
அவன் சேனையில் தாக்கல் செய்யப்பட்டான்.
2. I was admitted into the class.
நான் வகுப்பில் சேர்க்கப்பட்டேன்.
3. You established a company.
நீ ஒரு கம்பெனியை ஸ்தாபிதம் செய்தாய்.
4. They attended the congress.
அவர்கள் காங்ரஸ் மீட்டிங்கை கவனித்தார்கள்.

குறிப்பு :—மேலே காட்டிய வாக்கியங்களில் army, class, company, congress முதலியவைகள் ஓர் கூட்டத்தைக் குறிப்பிடுவதால் *Collective Noun* (கூட்டுப்பெயர்) என்று பெயர்.

உதாரணம் 4.

1. The horse is eating grass.
குதிரை புல்லைத் தின்றுகொண்டிருக்கிறது.
2. The cow gives milk.
பசு பாலைக் கொடுக்கிறது.

3. The vessel is made of silver.
பாத்திரம் வெள்ளியால் செய்யப்படுகிறது.

4. The jewel is made of gold.
நகை தங்கத்தால் செய்யப்படுகிறது.

குறிப்பு:—மேற்கண்ட வாக்கியங்களில் grass, milk, silver, gold முதலியவைகள் மூலவஸ்துப் பொருட்பெயர்களைக் குறிப்பதால் *Material Noun* (மூலவஸ்துப்பெயர்) என்று சொல்லப்படும்.

உதாரணம் 5.

1. We must work hard to improve our strength.
நம்முடைய பலத்தை விருத்தி செய்ய நாம் கடின வேலை செய்யவேண்டும்.

2. Considering your cleverness, the officer gave you promotion. உன்னுடைய கெட்டிக்காரத் தனத்தைக் கவனித்து ஆபீசர் உனக்குப் பிரமோஷனைக் கொடுத்தார்.

3. This shows your honesty.
இது உன்னுடைய யோக்கியதையைக் காட்டுகிறது.

4. You did not show humanity.
நீங்கள் காருண்யத்தைக் காட்டவில்லை.

குறிப்பு:—மேற்கண்ட வாக்கியங்களில் strength, cleverness, honesty, humanity என்ற வார்த்தைகள் *Abstract Noun* (பண்புப்பெயர்)-களாகும்.

பெயர்ச்சொற்கள் சம்பந்தமாய் நாம் சில விஷயங்களை முக்கியமாய் கவனிக்கவேண்டும்: அதாவது, 1. திணை (class), 2. பால் (gender), 3. எண் (number), 4. இடம் (person), 5. வேற்றுமை (case) முதலியவைகளே. இவைகள் ஒவ்வொன்றைப்பற்றியும் அடியில் கண்டபடி விபரமாய்க் கூறுகிறோம்:

திணை (Class).

திணையானது உயர்திணை யென்றும் (Personal), அஃறிணையென்றும் (Impersonal) இரண்டுவகைப்படும்.

உயர்திணையாவது (Personal).

மக்கள், தேவர் இவர்களைக் குறிப்பதாகும். உதாரணம்: சிவன் (Sivan), கணபதி (Ganapathi), இராமன் (Raman), சீதா (Sita) முதலியவைகளே.

அஃறிணையாவது (Impersonal).

மக்கள், தேவர் இவர்களைத்தவிர மற்ற யாவும் அஃறிணையாம். உதாரணம்: நாய் (Dog), நதி (River), மரம் (Tree) போன்றவைகளே.

குறிப்பு:—மனிதன், கடவுள் இவ்விரண்டு வகுப்பு தவிர மற்ற யாவும் அஃறிணையைச் சேர்ந்ததென்று கவனிக்க.

பால் (Gender.)

இங்கிலீஷில் Masculine Gender (ஆண்பால்), Feminine Gender (பெண்பால்), Common Gender (பொதுப்

பால்), Neuter Gender (அன்மைப்பால்) என்று நான்கு வகைப்படும். இதைப்பற்றி ஆங்கில போதினி 1-வது வாசியத்தில் விவரமாய் கூறியிருக்கிறோம். இப்பொழுது ஆண்பால், பெண்பால் இவைகளின் விவரங்களை அடியில் காட்டுகிறோம்:

மாதிரி 1.

ஆண்பால், பெண்பால் இவைகளை முறையே முன் பின்னாக அமைத்துக் காட்டுவது பின் வருமாறு:

1. Father and Mother — தகப்பனும் தாயும்.
2. Brother and Sister — சகோதரனும் சகோதரியும்.
3. Boy and Girl — பையனும் சிறுமியும்.
4. Husband and Wife — புருஷனும் பெண்சாதியும்.
5. King and Queen — இராஜாவும் இராஜாத்தியும்.
6. Man and Woman — மனிதனும் ஸ்திரீயும்.
7. Son and Daughter — மகனும் மகளும்.
8. Uncle and Aunt — { சிற்றப்பனும் சிற்றன்னையும், அல்லது, மாமனும் மாமியும்.

மாதிரி 2.

1. Man-servant and Maid-servant.
   வேலைக்காரனும் வேலைக்காரியும்.
2. Grand-father and Grand-mother.
   பாட்டனும் பாட்டியும்.
3. Washer-man and Washer-woman.
   வண்ணானும் வண்ணாத்தியும்.

4. Pea-cock and Pea-hen
ஆண்மயிலும் பெண்மயிலும்.

5. Land-lord and Land-lady
நிலக்காரனும் நிலக்காரியும்.

மாதிரி 3.

1. God and Goddess தேவனும் தேவதையும்.
2. Lion and Lioness ஆண்சிங்கமும் பெண்சிங்கமும்.
3. Shepherd and Shepherdess இடையனும் இடைச்சியும்.
4. Prince and Princess இளவரசனும் இளவரசியும்.

மாதிரி 4.

1. Duke and Duchess பிரபுவும் பிரபுபத்தினியும்.
2. Emperor and Empress சக்கரவர்த்தியும், சக்கரவர்த்தினியும்.

மாதிரி 5.

1. Bridegroom and Bride மணமகனும் மணமகளும்.
2. Widower and Widow தாரமிழந்தவனும், விதவையும்.

கவனிப்பு:—சூரியனை (Sun) ஆண்பாலாகவும், சந்திரனை (Moon) பெண்பாலாகவும் சொல்வதுண்டு. பொதுவாய் மேற்கண்ட 5 மாதிரிகளிலும், ஆண்பாலிலிருந்து பெண்பாலானது எவ்வித மாறுபாடடைகின்றது என்பதை கவனிக்க.

எண் (NUMBER.)

இங்கிலீஷில் எண் இருவகைப்படும். அதாவது, Singular (ஒருமை), Plural (பன்மை). ஒருமையிலிருந்து பன்மை ஏற்படும் விதத்தைப்பற்றி முதலாவது வாலியத்தில் விவரமாய் கூறியிருக்கிறோம். ஆனாலும் அடியிற் கண்ட விஷயங்களையும் அதிகமாய்க் கூறுகிறோம்.

மாதிரி 1.

சில சொற்கள் ஒருமையிலும் பன்மையிலும் ஒரே விதமாய் உபயோகப்படுகின்றன.

உதாரணம்.

1.	Sheep	ஆடு.
2.	Deer	மான்.
3.	Series	கோவை (புஸ்தகங்களின்).
4.	Apparatus	உபகரணம்.
5.	Corps	படைவகுப்பு.

மாதிரி 2.

முதலாவது வார்த்தையுடன் s சேர்த்துக்கொள்வதால் பன்மையுண்டாகும் விதங்களாவன:

ஒருமை.	பன்மை.
Passerby வழிப்போக்கன்.	Passersby வழிப்போக்கர்கள்.
Father-in-law மாமனார்.	Fathers-in-law மாமனார்கள்.
Mother-in-law மாமியார்.	Mothers-in-law மாமியார்கள்.
Daughter-in-law மருமகள்.	Daughters-in-law மருமக்கள்.

மாதிரி 3.

அடியிற்கண்ட வார்த்தைகள் பன்மைபோல் தோன்றினும், ஒருமையிலும் பன்மையிலும் ஒரே மாதிரியாகத்தான் உபயோகப்படுகின்றன :

1.	Bellows	துருத்தி.
2.	Bowels	குடல்.
3.	News	சமாசாரம்.
4.	Scissors	கத்தரிக்கோல்.
5.	Spectacles	மூக்குக்கண்ணாடி.
6.	Thanks	வந்தனோபசாரம்.
7.	Trowsers	காற்சட்டை.
8.	Wages	கூலி.

மாதிரி 4.

சில வார்த்தைகள் ஒருமையில் ஒரு அர்த்தமும், பன்மையில் வேறொரு அர்த்தமுமுள்ளதாயிருக்கின்றன.

ஒருமை.		பன்மை.	
1. Good	நன்மை.	Goods	சாமான்கள்.
2. Physic	மருந்து.	Physics	பிரகிருதிசாஸ்திரம்.
3. Force	பலம்.	Forces	சேனை.
4. Custom	வழக்கம்.	Customs	வரி.
5. Spectacle	காக்ஷி.	Spectacles	மூக்குக்கண்ணாடி.

இடம் (PERSON).

இங்கிலீஷில் இடம் மூன்று. அதாவது First Person (தன்மை), Second Person (முன்னிலை), Third Person (படர்க்கை) ஆக மூன்று விதமாகும்.

உதாரணம்.

	Singular.		Plural.	
1. தன்மை	I	நான்.	We	நாங்கள்.
2. முன்னிலை	You	நீ.	You	நீங்கள்.
3. படர்க்கை	He, She, It	அவன், அவள், அது.	They	அவர்கள், அவைகள்.

குறிப்பு:—முன்னிலை இடத்தில் ஒருமைக்கும், பன்மைக்கும் you ஒன்றே உபயோகத்தில் வருகிறது.

மேலே கண்ட மூவிடங்களையும், 8 வேற்றுமை உருபுகளால் தனித்தனியே சம்பந்தப்படுத்தி அடியிற்கண்டபடி விபரமாய்க் காட்டுகிறோம்:

தன்மையிடம் (FIRST PERSON.)

வேற்.	Singular.		Plural.	
1.	I	நான்	We	நாங்கள்.
2.	Me	என்னை	Us	எங்களை.
3.	With / By me	என்னோடு / என்னால்	With / By us	எங்களோடு. / எங்களால்.
4.	To / For me	எனக்கு	To / For us	எங்களுக்கு.

5. From me என்னிடமிருந்து From us எங்களிடமிருந்து.

6. My என்னுடைய Our எங்களுடைய.

7. in / at } me என்னில், என்னிடத்தில் In / At } us எங்களில். எங்களிடத்தில்.

8. ... Ah, Oh. ...

முன்னிலை (SECOND PERSON)

வேற். *Sing. or Pl.* ஒருமை அல்லது பன்மை.

1.	You	நீ, நீங்கள்.
2.	You	உன்னை, உங்களை.
3.	With } you	உன்னோடு, உங்களோடு.
	By } you	உன்னால், உங்களால்.
4.	To / For } you	உனக்கு, உங்களுக்கு.
5.	From you	உன்னிடமிருந்து. உங்களிடமிருந்து.
6.	Your	உன்னுடைய, உங்களுடைய.
7.	In } you	உன்னில், உங்களில்.
	At } you	உன்னிடத்தில், உங்களிடத்தில்.
8.	...	Ah, Oh. ...

குறிப்பு :—ஒருமைக்கும் பன்மைக்கும் you ஒன்றே ஏற்பட்டிருப்பதால் மேற்கண்டவாறு அமைத்துக்காட்டியிருக்கிறோம்.

படர்க்கை (THIRD PERSON.)

வேற்.	Singular.	Plural.
1.	He, அவன், She, It அவள், அது.	They அவர்கள்.
2.	Him, அவனை, Her, It அவளை, அதை	Them அவர்களை.
3.	With him, her, it அவனோடு, அவளோடு, அதோடு; By அவனால், அவளால் அதால்	With them அவர்களோடு. By அவர்களால்.
4.	To / For him, her, it அவனுக்கு, அவளுக்கு, அதற்கு	To / For them அவர்களுக்கு.
5.	From him அவனிடமிருந்து; her அவளிடமிருந்து; it அதனிடமிருந்து	From them அவர்களிடமிருந்து.
6.	His அவனுடைய; Her அவளுடைய; Its அதனுடைய	Their அவர்களுடைய.
7.	In / At him, her, it அவனில், அவனிடத்தில் அவளில், அவளிடத்தில் அதில், அதனிடத்தில்	In / At them அவர்களில். அவர்களிடத்தில்

வேற்றுமை (CASE).

தமிழ் இலக்கணத்தில் வேற்றுமைகள் 8 உண்டு. ஆனால் இங்கிலீஷிலோ மூன்றுதான், அதாவது, Nominative, Possessive, Objective என்று ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் நாம் தமிழ் இலக்கணத்தை அநுசரித்து 8 வேற்றுமைகளையும் தன்மை, முன்னிலை, படர்க்கை இம்மூவிடங்களிலும் அமைத்து தனித்தனியே மேலே காட்டியிருக்கிறோம். ஆனால் ஜீவராசிகள் சம்பந்தப்பட்டமட்டில் ஒரு பெயருக்கு 6-வது வேற்றுமை உருபு ஏற்படுத்த வேண்டுமானால் ஒருமைப்பெயருக்குப் பின்னால் Apostrophe s சேர்க்கவேண்டும். (அதாவது 's) ஆனால் s-இல் முடியாத பன்மைப் பெயர்களுக்கு 6-வது வேற்றுமை ஏற்படுத்தும்போதும் ஒருமையைப்போலவேதான் இதற்கும் சேர்க்கவேண்டும்.

உதாரணம் 1.

ஒ. The man's book — மனிதனுடைய புஸ்தகம்.
ப. The men's book — மனிதர்களுடைய புஸ்தகம்.
ஒ. The child's face — குழந்தையின் முகம்.
ப. The children's faces — குழந்தைகளுடைய முகங்கள்.

உதாரணம் 2.

ஒரு வார்த்தையின் பன்மையானது s-இல் முடிந்தால் அப்பேர்ப்பட்டவைகளுக்கு 6-வது வேற்றுமை உருபு ஏற்படும்பொருட்டு s-க்குப் பின்னால் Apostrophe சேர்க்கவேண்டுமென்பதை கவனிக்க.

ஒ. The boy's book — பையனுடைய புஸ்தகம்.
ப. The boys' book — பையன்களுடைய புஸ்தகம்.

ஒ. Teacher's service உபாத்தியாயருடைய செர்வீஸ்.
ப. Teachers' service உபாத்தியாயர்களுடையசெர்வீஸ்.

உதாரணம் 3.

ஜீவஜெந்துக்கள் யாவற்றுக்கும் 6-வது வேற்றுமை ஏற்படுத்திச் சொல்லும்போது மேற்காட்டிய விதிகளையே கவனிக்கவேண்டியது.

ஒ. The cat's leg பூனையினுடைய கால்.
ப. The cats' leg பூனைகளினுடைய கால்.
ஒ. The dog's tail நாயினுடைய வால்.
ப. The dogs' tail நாய்களினுடைய வால்.

உதாரணம் 4.

காலம், அளவு இப்பேர்ப்பட்டவைகளைக் குறிப்பிடும் போதும் மேற்கண்ட விதியையே கவனிக்கவேண்டும்.

1. A month's leave ஒரு மாசம் ரஜா.
2. Two months' leave இரண்டு மாசம் ரஜா.
1. One tola's weight ஒரு தோலா எடை.
2. Two tolas' weight இரண்டு தோலா எடை.

உதாரணம் 5.

மேற்காட்டிய மாதிரிகளைத் தவிர மற்றவைகளுக்கு 6-வது உருபு ஏற்படுத்தும்போது of என்பதைச் சேர்த்துச் சொல்லவேண்டும்.

The branch of a tree ஒரு மரத்தினுடைய கொப்பு.
The key of the box பெட்டியினுடைய திறவுகோல்.

ADJECTIVE.—பெயருரிச்சொல்.

I.

பெயருரிச்சொல்லில் ஆறு விதங்கள் உண்டு. அவை ஒவ்வொன்றையும் அடியில் விவரமாய்க் கூறுகிறோம்.

1. இடப்பெயருரிச்சொல் (PROPER ADJECTIVE).

உதாரணம்.

Indian railway	*இந்தியா இருப்புப்பாதை.*
British empire	*பிரித்தானியா இராஜ்யம்.*
French language	*பிராஞ்சிய பாஷை.*

குறிப்பு:—*மேற்கண்ட உதாரணங்களில்* Indian, British, French *முதலிய வார்த்தைகள் Proper Adjective ஆகும்.*

---

2. தன்மைப்பெயருரிச்சொல் (DESCRIPTIVE ADJECTIVE)

உதாரணம்.

A strong man	*ஒரு பலத்த மனிதன்.*
A clever boy	*ஒரு கெட்டிக்கார பையன்.*
A small bench	*ஒரு சிறிய பெஞ்சு.*

குறிப்பு:—*மேற்கண்டவைகளில்* strong, clever, small, *முதலியவைகள் Descriptive Adjective ஆகும்.*

---

3. அளவுப்பெயருரிச்சொல் (QUANTITATIVE ADJECTIVE)

உதாரணம்.

Rama ate much food இராமன் அதிக ஆகாரம் தின்றான்.
I had little money நான் கொஞ்சம் பணம் வைத்திரு [ந்தேன்.

குறிப்பு :—மேற்கண்ட வாக்கியங்களில் much, little முதலிய வார்த்தைகள் *Quantitative Adjective* ஆகும்.

---

4. எண்பெயருரிச்சொல் (NUMERAL ADJECTIVE.)

உதாரணம்.

1. Two boys இரண்டு பையன்கள்.
2. Three tables மூன்று மேஜைகள்.
3. Four benches நான்கு பெஞ்சுகள்.
4. Second month இரண்டாவது மாதம்.
5. Third man மூன்றாவது மனிதன்.
6. Fourth witness நான்காவது சாக்ஷி.

குறிப்பு :—மேற்கண்ட எண்ணுரிச்சொல்லில் இரண்டு விதங்களுண்டு. அதாவது, *Cardinals* என்றும், *Ordinals* என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் two, three, four முதலியவைகள் முந்திய வகுப்போடும், second, third, fourth முதலியவைகள் பிந்திய வகுப்போடும் சேர்ந்தவைகளென்றறிக.

---

5. சுட்டுப்பெயருரிச்சொல் (Demonstrative Adjective)

உதாரணம்.

This man	இந்த மனிதன்.
That cow	அந்தப் பசு.
Those oxen	அந்த எருதுகள்.
A book	ஒரு புஸ்தகம்.
An eagle	ஒரு கழுகு.
Certain men	சில மனிதர்கள்.

குறிப்பு :—மேற்கண்ட பெயருரிச்சொல்லில் இரண்டு விதமுண்டு. அதாவது, *Definite* என்றும், *Indefinite* என்றும் பிரிக்கப் பட்டிருக்கின்றன. இவைகளில் this, that, those என்பவைகள் முந்திய வகுப்போடும், a, an, certain முதலியவைகள் பிந்திய வகுப்புடனும் சேர்ந்தவைகளாகும். ஆனால் a, an முதலியவைகள் சில சமயங்களில் சாரியைகளாகவும் (*Articles*), this, that, those முதலியவைகள் பிரதிப் பெயர்ச்சொற்களாகவும் (*Pronouns*) உபயோகப்படும்.

6. விபாகவுரிச்சொல் (Distributive Adjective.)

உதாரணம்.

1. I met him on each occasion
   நான் ஒவ்வொரு தடவையிலும் அவனைச் சந்தித் [தேன்.
2. He came every day
   அவன் பிரதிதினமும் வந்தான்.
3. You must select either this or that
   நீ இதையாகிலும் அதையாகிலும் தெரிந்தெடுக்க [வேண்டும்.
4. He joined neither side.
   அவன் இருபக்கத்திலும் சேரவில்லை.

குறிப்பு :—மேற்கண்ட வாக்கியங்களில் each, every, either, neither என்பவை *Distributive Adjective* ஆகும்.

II.

பெயருரிச்சொற்களுக்கு மூன்று நிலைகள் உண்டு. அதாவது, தன்னிலை (Positive), தரநிலை (Comparative), தமநிலை (Superlative) எனப்படும். உதாரணமாக: good என்பதற்கு நல்ல என்றர்த்தம். இது தன்னிலையிலிருக்கிறது. இதற்கு தரநிலை மிக நல்ல (better) என்றும், அப்பால் தமநிலையில் மகா நல்ல (best) என்றும் ஏற்படும். இதைப்போலவே அடியிற்கண்ட சில வார்த்தைகளைக் காட்டுகிறோம்.

உதாரணம்.

	தன்னிலை.	தரநிலை.	தமநிலை.
1.	Small சிறிய	Smaller மிகச்சிறிய	Smallest மகா சிறிய
2.	Great பெரிய	Greater மிகப்பெரிய	Greatest மகா பெரிய
3.	Hot சூடான	Hotter மிகச்சூடான	Hottest மகா சூடான
4.	Wise ஞானமுள்ள	Wiser மிகஞானமுள்ள	Wisest மகா ஞானமுள்ள
5.	Bad கெட்ட	Worse மிகக்கெட்ட	Worst மகா கெட்ட
6.	Little சிறிய	Less மிகச்சிறிய	Least மகா சிறிய
7.	Late தாமதமான	Later மிகத்தாமதமான	Latest மகா தாமதமான

இனி Pronoun-ஐப்பற்றி பின்னால் கூறுகிறோம்.

PRONOUN—பிரதிப்பெயர்ச்சொல்.

பிரதிப்பெயர்ச்சொல்லானது ஒரு பெயர்ச்சொல்லின் ஸ்தானத்தில் உபயோகப்படும் வார்த்தையாகும். அது எவ்வாறு வாக்கியங்களில் உபயோகப்படுகிறதென்ற விஷயத்தை அடியில் விவரமாய் காட்டுகிறோம்:

உதாரணம்.

As soon as my father came, my father gave me two mangoes. என்னுடைய தகப்பனார் வந்தவுடனே, என்னுடைய தகப்பனார் இரண்டு மாம்பழங்களை எனக்குக் கொடுத்தார்.—என்ற வாக்கியத்தில், "என்னுடைய தகப்பனார்" என்று இரண்டு தபா உபயோகத்தில் வருகின்றன. அப்படிக்கன்னியில் ஓரே தபா வரும்படி உபயோகிக்க வேண்டுமானால் அடியிற் கண்டபடி உபயோகிக்கவேண்டும். அதாவது, "என் தகப்பனார் வந்தவுடனே அவர் எனக்கு இரண்டு மாம்பழங்களைக் கொடுத்தார்" என்று வாக்கியம் அமையவேண்டும். ஆகையால் "அவர்" என்னும் பிரதிப்பெயரானது "என்னுடைய தகப்பனார்" என்ற ஸ்தானத்தில் உபயோகப்படுகிறது. ஆகவே இங்கிலீஷிலும் ஷை வாக்கியமானது As soon as my father came, he gave me two mangoes என்றிருக்கவேண்டும். இது விஷயமாய் அடியிற்கண்ட அப்பியாச வாக்கியங்களையும் கவனிக்க.

அப்பியாச வாக்கியங்கள்.

1. As soon as my mother came, she gave me two oranges.—என் தாயார் வந்தவுடனே அவள் எனக்கு இரண்டு ஆரஞ்சு கொடுத்தாள்.
2. As soon as I saw the dog, it came to bite me—நான் நாயைக் கண்டவுடனே அது என்னைக் கடிக்க வந்தது.
3. As soon as the travellers reached the town, they entered into the choultry.—பிரயாணிகள் பட்டணம் சேர்ந்தவுடன் அவர்கள் சத்திரத்துக்குள் நுழைந்தார்கள்.

குறிப்பு:—மேற்கண்ட வாக்கியங்களில் she, it, they முதலிய பிரதிப்பெயர்கள் எவ்வாறு உபயோகத்தில் வந்திருக்கின்றனவென்பதை கவனிக்க.

சம்பந்தப்பிரதிப்பெயர் (Relative Pronoun.)

Who, which என்ற சம்பந்தப்பிரதிப்பெயர்கள் எவ்வாறு உபயோகத்தில் வருகின்றனவென்பதை பின்னால் காட்டுகிறோம்:

(1) A beggar saw my father, who helped him very much. ஒரு பிச்சைக்காரன் என் தகப்பனாரைக் கண்டான், அவர் அவனுக்கு மிகுந்த உதவி செய்தார். இந்த வாக்கியத்தில் who (அவர்) என்ற Relative Pronoun ஆனது father என்ற noun-க்குப் பதில் பிரதிப்பெயர்ச் சொல்லாக உபயோகப்படுகிறது.

(2) My father had a cat, which killed the rats very much. என்னுடைய தகப்பனார் ஒரு பூனையை வைத்திருந்தார், அது எலிகளை மிகுதியாய்க் கொன்றது.

இந்த வாக்கியத்தில் which (அது) என்ற பிரதிப்பெயரானது cat என்னும் noun-க்கு பிரதியாய் உபயோகத்தில் வருகிறதென்பதைக் கவனிக்க.

குறிப்பு :—மேற்கண்ட வாக்கியங்களில் who, which என்பவைகளை continuative sense-இல் அதாவது தொடர்முறை நோக்கத்தில் இணைத்து காட்டியிருக்கிறோம். ஆனால் restrictive sense-இல் (பெயரொச்சமுறையில்) உபயோகத்தில் வருவதைப்பற்றி வினைச்சொல்லின் கீழ் விபரமாய் கூறுவோம்.

வினாப்பிரதிப்பெயர் (Interrogative Pronoun).

Who, which, what என்றவைகள் வினாப்பிரதிப் பெயராக எவ்வாறு உபயோகத்தில் வருகிறதென்பதைப் பற்றி பின்னால் காட்டுகிறோம் :

உதாரணம்.

Who are you ?	நீ யார் ?
Which is your native place ?	உன் ஊர் எது ?
What is your name ?	உன் பெயர் என்ன ?

என்ற வாக்கியங்களில் யார், எது, என்ன என்று கேள்விகள் கேட்பதற்கு who, which, what என்ற வினாப் பிரதிப்பெயர்கள் முதலில் உபயோகப்படுகின்றனவென் பதை யறியவும்; தவிர அடியிற்கண்ட வாக்கியங்களுக்கு பிற்பட்ட அர்த்தத்தையும் கவனிக்க.

1. Who is he ? என்றால் அவன் பெயரென்ன ?
2. What is he ? என்றால் அவன் தொழில் என்ன ?

என்றுமிருப்பதைக் கவனிக்கவும்.

நிற்க, இதுவரை மாணுக்கர்களுக்கு அநுபோக முறைக்கு எம்மட்டில் தெரியவேண்டுமோ அம்மட்டில் சொல்லியிருக்கிருேம். இனி எல்லாவற்றிலும் மிகவும் முக்கியமாய்த் தெரிந்துகொள்ளவேண்டிய வினைச்சொல் லைப்பற்றி (Verb) பின்வருமாறு கூறுகிருேம்.

VERB—வினைச்சொல்.

பொருளின் தொழிலைக் காட்டுவது வினைச்சொல்லாகும். Govindan cut a tree, கோவிந்தன் ஒரு மரத்தை வெட்டினுன்—என்பதில், 'வெட்டினுன்' என்னும் வினையானது கர்த்தாவாகிய 'கோவிந்தன்' என்பவனுடைய தொழிலைக் காட்டுகிறது. மற்றும் வினைச்சொற்களின் பிரிவுகளைப்பற்றியும், எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் கண்டுபிடிக்கும் வகைகளைப்பற்றியும், வினைச்சொற்களுக்கு ஏற்பட்ட காலங்களைப்பற்றியும் ஆங்கில போதினி 1-வது வாசியத்தில் விரிவாய்ச் சொல்லியிருக்கிருேம். ஆனுல் ஒரு வாக்கியத்திலுள்ள எழுவாயானது எண், இடம் முதலியவைகளை அனுசரித்து வினைகளை நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலங்களில் எவ்வாறு ஏற்றுக்கொள்ளுகிறதென்ற விஷயத்தை பின்னுல் காட்டுகிருேம்.

1-ம் பாடம்.

எழுவாயானது ஒருமையிலிருந்தால் பயனிலையும் ஒருமையில் இருக்கவேண்டும்; எழுவாயானது பன்மையிலிருந்தால் பயனிலையும் பன்மையிலிருக்கவேண்டும் என்ற விஷயங்களை பின்னுல் காட்டுகிற உதாரணங்களால் தெரிந்துகொள்ளலாம்.

நிகழ்காலம் (PRESENT TENSE).

ஒருமை. பன்மை.

தன்மை.

I am நானிருக்கிறேன். We are நாங்களிருக்கிறோம்.

முன்னிலை.

You are நீயிருக்கிறாய். You are நீங்களிருக்கிறீர்கள்.

படர்க்கை.

He is அவன் இருக்கிறான்.
She is அவள் இருக்கிறாள்.
It is அது இருக்கிறது.
They are அவர்கள் இருக்கிறார்கள். அவைகள் இருக்கின்றன.

குறிப்பு :—மேலே காட்டிய வாக்கியங்களில் "am இருக்கிறேன்" என்னும் வினைமுற்றானது எப்பொழுதும் தன்மை ஒருமையாகிய I என்பதற்குத்தான் உபயோகத்தில் வரும். "Are இருக்கிறோம்" என்னும் வினைமுற்றானது எப்பொழுதும் தன்மை, முன்னிலை, படர்க்கை இம்மூவிடங்களில் பன்மையில் we, you, they முதலியவைகளுக்கு உபயோகத்தில் வரும். "Is இருக்கிறான்" என்னும் வினைமுற்றானது எப்பொழுதும் படர்க்கை ஒருமையில் he, she, it முதலியவைகளுக்கும் மேற்கண்ட நிகழ்காலங்களில் உபயோகத்தில் வருமென்பதை யறிக. முன்னிலை ஒருமைக்கும், முன்னிலை பன்மைக்கும் you என்றே வழக்கத்தில் உபயோகப்பட்டுவருகிறது.

அப்பியாச பாடங்கள்.

1. I am a poor boy நான் ஒரு ஏழை (பையனா)யிருக்கி[றேன்.
2. We are very rich நாங்கள் மிகவும் பணக்காரர்களாயிருக்கிறோம்.

3. You are a merchant நீ ஒரு வியாபாரியாயிருக்கிறாய்.
4. He is a land-lord அவன் ஒரு நில சுவான்தாராயிருக்கிறான்.
5. She is a beautiful girl அவள் ஒரு அழகிய பெண்ணாயிருக்கிறாள்.
6. They are schoolmasters அவர்கள் உபாத்தியாயர்களாயிருக்கிறார்கள்.

குறிப்பு:—மேற்கண்ட அப்பியாச பாடங்களிலும் எழுவாய், பயனிலைகள் எவ்வாறு அமைந்திருக்கிறதென்று கவனிக்க. இனி இறந்தகாலத்தில் was என்னும் வினைமுற்றானது எவ்வாறு உபயோகத்தில் வருகிறதென்ற விஷயத்தை பின்னால் காட்டுகிறோம்.

இறந்தகாலம் (PAST TENSE.)

	ஒருமை.	பன்மை.
தன்மை.	I was நானிருந்தேன்.	We were நாங்களிருந்தோம்.
முன்னிலை.	You were நீ இருந்தாய்.	You were நீங்களிருந்தீர்கள்.
படர்க்கை.	He she, it was அவன், அவள், அது இருந்தது.	They were அவர்கள் இருந்தார்கள். அவைகள் இருந்தன.

குறிப்பு:—Am என்பதற்கு இறந்தகாலம் was. ஆகையால் இந்த வினைமுற்றானது தன்மை ஒருமையாகிய I, he, she, it முதலியவைகளுக்கும், were என்னும் வினைமுற்றானது தன்மை, முன்னிலை, படர்க்கை பன்மைகளுக்கும் உபயோகத்தில் வருகின்றனவென்பதை கவனிக்க.

அப்பியாச பாடங்கள்.

1. I was a clerk நான் ஒரு குமாஸ்தாவாயிருந்தேன்.
2. We were surgeons நாங்கள் இரண வைத்தியர்களா [யிருந்தோம்.
3. You were a magistrate நீ அல்லது நீங்கள் ஒரு [மாஜிஸ்டிரேட்டாராயிருந்தீர்கள்.
4. He was a pleader அவன் ஒரு வக்கீலாயிருந்தான்.
5. She was a servant அவள் ஒரு வேலைக்காரியாயிருந் [தாள்.
6. They were peons அவர்கள் சேவகர்களாயிருந்தார் [கள்.

குறிப்பு:—இனி எதிர்கால வாக்கியங்கள் இருப்பேன் shall or will be என்று அமையவேண்டியிருப்பதால் அவைகளைப் பின்னால் காட்டுகிறோம்.

எதிர்காலம் (FUTURE TENSE.)

	ஒருமை.	பன்மை.
தன்மை.	I shall be நானிருப்பேன்.	We shall be நாங்களிருப்போம்.
முன்னிலை.	You will be நீ இருப்பாய்.	You will be நீங்களிருப்பீர்கள்.
படர்க்கை.	He, she, it will be அவன், அவள், அது இருப்பான்.	They will be அவர்களிருப்பார்கள். அவைகளிருக்கும்.

குறிப்பு:—மேற்காட்டியவைகளில் shall be என்னும் வினைமுற்றானது I, we என்பதற்கும், மற்றும் முன்னிலை, படர்க்கை இடங்களுக்கு will be-யும் எதிர்காலத்தில் உபயோகப்பட்டு வருகிறது.

அப்பியாசபாடங்கள்.

1. I shall do it நான் அதைச் செய்வேன். [வோம்.
2. We shall cut a tree நாங்கள் ஒரு மரத்தை வெட்டு
3. You will go to market நீ அல்லது நீங்கள் சந்தைக் [குப் போவீர்கள்.
4. He will speak with me அவன் என்னோடு பேசுவான்.
5. She will bring water அவள் தண்ணீர் கொண்டுவரு [வாள்.
6. They will dig a pit அவர்கள் ஒரு குழி தோண்டுவா [ர்கள்.

குறிப்பு:—இனி am என்னும் வினைமுற்றைப்போலவே ஆங்கில போதினி 1-வது வாலியம், 97, 98-ம் பக்கங்களில் காட்டியிருக்கிற வினைமுற்றுகளில் ஒன்றாகிய give என்னும் வினைமுற்றை முக்காலங்களிலும் வைத்து பின்வருமாறு காட்டுகிறோம்.

2-ம் பாடம்.

I give நான் கொடுக்கிறேன்.—இதில் give என்னும் வினையானது மூவிடங்களிலும், முக்காலங்களிலும் உபயோகப்பட்டுவருவது பின்வருமாறு:

நிகழ்காலம் (Present Tense.)

ஒருமை.	பன்மை.
தன்மை.	
I give நான் கொடுக்கிறேன்.	We give நாங்கள் கொடுக்கிறோம்.

முன்னிலை.

You give நீ கொடுக்கிறாய்.	You give நீங்கள் கொடுக்கிறீர்கள்.

படர்க்கை.

He She It	gives	அவன் கொடுக்கிறான். அவள் கொடுக்கிறாள். அது கொடுக்கிறது.	They give [றார்கள். அவர்கள் கொடுக்கி அவை கொடுக்கின்றன

குறிப்பு :—நிகழ்காலத்துப் படர்க்கை ஒருமை வினைமுற்றுக்கு s அல்லது es சேர்க்கவேண்டுமென்ற விதியைக் கவனிக்க. இதைப்பற்றி 1-வது வாலியத்திலும் சொல்லியிருக்கிறோம்.

அப்பியாச பாடங்கள்.

நிகழ்காலம்.

1. I give a pen நான் ஒரு பேனாவைக் கொடுக்கிறேன்.
2. We give ten rupees நாங்கள் பத்து ரூபாய்களைக் [கொடுக்கிறோம்.
3. You utter falsehood நீ பொய் சொல்லுகிறாய்.
4. He speaks the truth அவன் உண்மை பேசுகிறான்.
5. They sleep well அவர்கள் நன்றாய் தூங்குகிறார்கள்.

குறிப்பு :—இனி இறந்தகாலத்துக்கு gave என்னும் வினைமுற்றும் எதிர்காலத்திற்கு shall அல்லது will give என்னும் வினைமுற்றையும் வைத்துச் சொன்னால் மேற்கண்டபடி வாக்கியங்களமையும் என்பதை பின்வரும் அப்பியாசபாடங்களில் கவனிக்கவும்.

இறந்தகாலம்.

1. I gave the book *நான் புஸ்தகத்தைக் கொடுத்தேன்.*
2. We came to village *நாங்கள் கிராமத்துக்கு வந்தோம்.*
3. You saw my brother *நீங்கள் என் சகோதரனைப் [பார்த்தீர்கள்.*
4. He wrote a letter *அவன் ஒரு கடிதத்தை எழுதினான்.*
5 She spoke the truth *அவள் உண்மையைப் பேசினாள்*
6. They brought the bundle *அவர்கள் சுமையைக் [கொண்டுவந்தார்கள்.*

எதிர்காலம்.

1. I shall give you a present.
   நான் உனக்கு ஒரு இனாம் கொடுப்பேன்.
2. We will go to bazaar.
   நாங்கள் கடைக்குப் போவோம்.
3. You will collect the arrears.
   நீங்கள் பாக்கியை வசூல் செய்வீர்கள்.
4. He will come to my house.
   அவன் என் வீட்டுக்கு வருவான்.
5. They will start to-morrow.
   அவர்கள் நாளைக்குப் புறப்படுவார்கள்.

குறிப்பு:—*மேற்கண்ட அப்பியாச பாடங்களில்* give *என்னும் வினைமுற்று முக்காலங்களிலும் எவ்விதம் உபயோகப்படு கிறதோ அதேமாதிரி மற்ற வினைமுற்றுகளும் அந்தந்த காலங்களை அநுசரித்து எவ்வாறு உபயோகப்பட்டு வரு கின்றனவென்பதைக் காட்டியிருக்கிறோம்: இது நிற்க, நாம் எந்த ஒரு வினைமுற்றோடாவது* ing *சேர்க்கிறோமா*

அந்த வினைமுற்றுக்கு ஏற்பட்ட அர்த்தத்தோடு "கொண்டு" என்ற அர்த்தம் ஏற்படுகிறது. ஆகையால் நாம் go என்னும் வார்த்தையோடு ing சேர்த்தால் going என்று ஆயிற்று. இதற்கு அர்த்தம் "போய்க்கொண்டு" என்று ஏற்படுகிறது. இனி I am என்னும் ஒரு வாக்கியத்தோடு going என்றதை தொடர்ந்துவைத்துச் சொன்னால் வாக்கியம் எவ்வாறு அமையுமென்பதை பின்னால் காட்டுகிறோம்.

3-ம் பாடம்.

I am going நான் போய்க்கொண்டிருக்கிறேன்.—இம்மாதிரி வாக்கியங்கள் ஒரு செய்கையானது முடிவாகாமல் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும் சமயங்களில் உபயோகப்படுகிறது.

நிகழ்காலம் (Present Tense).

தன்மை.

I am going நான் போய்க்கொண்டிருக்கிறேன்.
We are going நாங்கள் போய்க்கொண்டிருக்கிறோம்.

முன்னிலை.

You are going நீ அல்லது நீங்கள் போய்க்கொண்டிருக்கிறீர்கள்.

படர்க்கை.

He is going அவன் போய்க்கொண்டிருக்கிறான்.
She is going அவள் போய்க்கொண்டிருக்கிறாள்.
It is going அது போய்க்கொண்டிருக்கிறது.
They are going அவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள்.
அவைகள் போய்க்கொண்டிருக்கின்றன.

குறிப்பு :—மேற்காட்டிய மாதிரிப்படி மற்றும் வேறெந்த வினை முற்றுகளுடனும் ing சேர்த்து வாக்கியங்களையமைத்து அடியிற்கண்ட அப்பியாச பாடங்களில் காட்டுகிறோம்.

அப்பியாச பாடங்கள்.

1. I am coming நான் வந்துகொண்டிருக்கிறேன்.
2. We are seeing நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கி [றோம்.
3. You are reading நீங்கள் வாசித்துக்கொண்டிருக்கி [றீர்கள்.
4. He is singing அவன் பாடிக்கொண்டிருக்கிறான்.
5. She is working அவள் வேலைசெய்துகொண்டி [ருக்கிறாள்.
6. They are making அவர்கள் செய்துகொண்டிருக்கி [றார்கள்.

குறிப்பு :—இனி இறந்த காலத்துக்கு was அல்லது were-உம் எதிர்காலத்துக்கு shall அல்லது will be-யும் giving என்பதற்கு முன்னால் அமைத்துச் சொன்னால் அந்தந்த காலங்கள் ஏற்படுமென்பதை கவனிக்க.

அப்பியாச பாடங்கள்.

1. I was going to temple.
   நான் கோவிலுக்குப் போய்க்கொண்டிருந்தேன்.
2. We were reading in the school. [தோம்.
   நாங்கள் பள்ளிக்கூடத்தில் வாசித்துக்கொண்டிருந்
3. You were grazing the sheep.
   நீங்கள் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தீர்கள்.

4. He was playing in the garden
அவன் தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருந்தான்.
5. They were selling the rice
அவர்கள் அரிசியை விற்றுக்கொண்டிருந்தார்கள்.

குறிப்பு :—மேற்காட்டிய வாக்கியங்களிலேயே shall அல்லது will be-யை வைத்து அமைத்து வாக்கியங்கள் எதிர்காலத்தில் எவ்வாறு அமையுமென்று யூகித்துக்கொள்ளவும். இனி I have என்னும் வாக்கியத்தின் பிரயோகத்தைப்பற்றி பின்னால் விவரித்துக்காட்டுகிறோம்.

4-ம் பாடம்.

I have என்னும் வாக்கியத்திற்கு 3 விதமாய் அர்த்தம் சொல்லலாம். அதாவது: (1) நான் வைத்திருக்கிறேன், (2) என்னிடத்திலிருக்கிறது, (3) எனக்கு உண்டு. இந்த மூன்றில் எதை வேண்டுமானாலும் உபயோகிக்கலாம். நாம் இப்பொழுது முதலாவது சொன்ன அர்த்தத்தையே வைத்து அடியில் வரும் வாக்கியங்களைக் காட்டுகிறோம்.

நிகழ்காலம் (Present Tense.)

ஒருமை.	பன்மை.
தன்மை.	
I have நான் வைத்திருக்கிறேன்.	We have நாங்கள் வைத்திருக்கிறோம்.
முன்னிலை.	
You have நீ வைத்திருக்கிறாய்.	You have நீங்கள் வைத்திருக்கிறீர்கள்.

படர்க்கை.

He	has	அவன் வைத்திருக்கிறான்	They have
She	has	அவள் வைத்திருக்கிறாள்	அவர்கள் வைத்
It	has	அது வைத்திருக்கிறது	திருக்கிறார்கள்.

குறிப்பு:—மேற்கண்டவைகளில் படர்க்கை ஒருமையாகிய he, she, it என்பதற்கு மாத்திரம் has என்பது நிகழ்காலத்தில் உபயோகப்படுகிறது, மற்றவைகளுக்கெல்லாம் have என்பதே உபயோகத்தில் வருகிறதை கவனிக்க.

அப்பியாச பாடங்கள்.

1. I have a chair
   நான் ஒரு நாற்காலி வைத்திருக்கிறேன்.
2. We have the table
   நாங்கள் மேஜையை வைத்திருக்கிறோம்.
3. You have a slate
   நீங்கள் ஒரு சிலேட்டை வைத்திருக்கிறீர்கள்.
4. He has a turban
   அவன் தலைப்பாகை வைத்திருக்கிறான்.
5. She has a dress
   அவள் ஒரு உடுப்பு வைத்திருக்கிறாள்.
6. They have limes
   அவர்கள் எலுமிச்சம்பழங்களை வைத்திருக்கிறார்கள்.

குறிப்பு:—Have என்பதற்கு இறந்தகாலம் had. இது எவ்வாறு இறந்தகாலத்தில் உபயோகப்படுகிறதென்பதை பின்னால் காட்டுகிறோம்.

இறந்தகாலம் (PAST TENSE).

ஒருமை.	பன்மை.
தன்மை.	
I had நான் வைத்திருந்தேன்.	We had நாங்கள் வைத்திருந்தோம்.
முன்னிலை.	
You had நீ வைத்திருந்தாய்.	You had நீங்கள் வைத்திருந்தீர்கள்.
படர்க்கை.	
He had — அவன் வைத்திருந்தான் She had — அவள் வைத்திருந்தாள் It had — அது வைத்திருந்தது	They had அவர்கள் வைத்திருந்தார்கள்.

குறிப்பு:—மேற்கண்ட வாக்கியங்களில் had ஒன்றே எவ்வித மாறுபாடன்றியில் மூவிடங்களிலும் உபயோகப்பட்டிருக்கின்றது.

அப்பியாச பாடங்கள்.

1. I had a stick
   நான் ஒரு கம்பு வைத்திருந்தேன்.
2. We had a bag
   நாங்கள் ஒரு பையை வைத்திருந்தோம்.
3. You had a cow
   நீ ஒரு பசு வைத்திருந்தாய்.
4. He had a dog
   அவன் ஒரு நாய் வைத்திருந்தான்.
5. She had a vessel.
   அவள் ஒரு பாத்திரம் வைத்திருந்தாள்.

இனி எதிர்காலத்தில் shall அல்லது will have எவ்விதமாய் உபயோகப்படுகிறதென்பதை பின்னால் காட்டுகிறோம்.

எதிர்காலம் (Future Tense).

ஒருமை.	பன்மை.
தன்மை.	
I shall have நான் வைத்திருப்பேன்.	We shall have நாங்கள் வைத்திருப்போம்.
முன்னிலை.	
You will have நீ வைத்திருப்பாய்.	You will have நீங்கள் வைத்திருப்பீர்கள்.
படர்க்கை.	

He She It	will have	அவன் வைத்திருப்பான் அவள் வைத்திருப்பாள் அது வைத்திருக்கும்	They will have அவர்கள் வைத்திருப்பார்கள்.

குறிப்பு:—இதற்கு அப்பியாச பாடமாக இறந்தகாலத்தில் காட்டியிருக்கிற stick, bag, cow, dog, vessel என்ற வார்த்தைகளை shall அல்லது will have என்பதற்குப் பின்னால் அமைத்துக்கொண்டு அர்த்தத்தை யூகிக்க.

இனி வினைச்சொற்கள் நிகழ்காலம், இறந்தகாலம், இறந்தகாலவினையெச்சமாக உபயோகப்பட்டுவருகிறதை 1-வது வாலியத்தில் வினைச்சொற்களின் கீழ்த் தெளிவாய் காட்டியிருக்கிறோம். ஆகையால் have என்னும் வினைமுற்றுடன் given என்னும் இறந்தகாலவினையெச்சத்தை

சேர்த்து உபயோகித்தால் வாக்கியங்கள் எவ்வாறு அமையுமென்பதை பின்னால் காட்டுகிறோம்.

5-ம் பாடம்.

I have given நான் கொடுத்திருக்கிறேன்.—இப்பேர்ப்பட்ட வாக்கியங்களில் have என்பதற்கு அர்த்தம் am என்பதற்கு ஏற்பட்டதைப்போலவே 'இருக்கிறேன்' என்று ஏற்பட்டபோதிலும் ஒரு இறந்தகாலவினையெச்சமாகிய given என்னும் வார்த்தையைச் சேர்த்துக்கொண்டு உபயோகத்தில் வரும்போது மேற்காட்டியபடியேதான் அர்த்தம் அமையும் என்பதை நன்றாய் கவனிக்க வேண்டும். ஆகையால் முக்காலங்களிலும் எவ்விதமாய் உபயோகத்தில் வருகின்றனவென்பதை பின்னால் காட்டுகிறோம்.

நிகழ்காலம் (Present Perfect Tense.)

ஒருமை.	பன்மை.
தன்மை.	
I have given நான் கொடுத்திருக்கிறேன்.	We have given நாங்கள் கொடுத்திருக்கிறோம்.
முன்னிலை.	
You have given நீ கொடுத்திருக்கிறாய்.	You have given நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்.
படர்க்கை.	
He has given அவன் கொடுத்திருக்கிறான்.	They have given அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

குறிப்பு:—He, she, it என்பதற்கு மாத்திரம் நிகழ்கால ஒருமைப் படர்க்கையில் have என்றதற்கு பதில் has என்பதைச் சேர்த்துச் சொல்லவேணுமென்பதை மறுபடியும் ஞாபகப்படுத்துகிறோம். இனி வேறு வினையெச்சங்களை I have என்பதுடன் சேர்த்து பின்வருமாறு அப்பியாசபாடங்கள் கொடுக்கிறோம்.

அப்பியாசபாடங்கள்.

1. I have done the business
   நான் வேலையைச் செய்திருக்கிறேன்.
2. We have seen our friends [றோம்.
   நாங்கள் எங்கள் சினேகிதர்களைப் பார்த்திருக்கி
3. You have gone to temple
   நீங்கள் கோயிலுக்குப் போயிருக்கிறீர்கள்.
4. He has written a letter
   அவன் ஒரு கடிதத்தை எழுதியிருக்கிறான்.
5. They have come to court
   அவர்கள் கோர்ட்டுக்கு வந்திருக்கிறார்கள்.

கவனிப்பு:—Have என்பதற்கு இறந்தகாலம் had. இதானது மூவிடங்களிலும் ஒன்றுபோல் உபயோகப்படுகிறது. ஆகையால் அடியிற்கண்டபடி இறந்தகாலத்திற்கு அப்பியாச பாடங்கள் கொடுக்கிறோம்.

இறந்தகாலம் (PAST PERFECT TENSE).

அப்பியாச பாடங்கள்.

1. I had given a key
   நான் ஒரு திறவுகோல் கொடுத்திருந்தேன்.

2. We had given a chair
நாங்கள் ஒரு நாற்காலி கொடுத்திருந்தோம்.

3. You had given a table
நீங்கள் ஒரு மேஜை கொடுத்திருந்தீர்கள்.

4. He had given a cow
அவன் ஒரு பசுவைக் கொடுத்திருந்தான்.

5. They had given some papers
அவர்கள் சில காகிதங்களைக் கொடுத்திருந்தார்கள்.

கவனிப்பு:—Have என்பதோடு shall அல்லது will என்பதை முன்னால் வைத்து ஒரு இறந்தகால வினையெச்சத்தோடு உபயோகித்தால் எதிர்காலத்தில் வாக்கியங்கள் எவ்வாறு அமையுமென்பதற்கு பின்வரும் அப்பியாச பாடங்களைப் பார்க்க.

எதிர்காலம் (Future Perfect Tense).

அப்பியாச பாடங்கள்.

1. I shall have given a pencil
நான் ஒரு பென்சிலைக் கொடுத்திருப்பேன்.

2. We shall have given the record
நாங்கள் ரிக்கார்டைக் கொடுத்திருப்போம்.

3. You will have gone to Madura
நீங்கள் மதுரைக்குப் போயிருப்பீர்கள்.

4. He will have seen my friend
அவன் என்னுடைய சிநேகிதனைப் பார்த்திருப்பான்.

5. They will have filed the suit
அவர்கள் வியாச்சியத்தை தாக்கல் செய்திருப்பார்கள்.

கவனிப்பு:—இனி may என்றது ஒரு வாக்கியத்தில் எவ்வாறு பிரயோகப்படுகிறதென்ற விஷயத்தைப் பின்னால் காட்டுகிறோம்.

6-ம் பாடம்.

I may attend the meeting நான் அந்த மீட்டிங்கை கவனிக்கலாம்.—இப்பேர்ப்பட்ட வாக்கியங்கள் ஒருவருடைய அனுமதியின்பேரில் செய்யக்கூடிய விஷயங்களில் உபயோகிப்பது பொருத்தமுள்ளதாகும்.

அப்பியாச பாடங்கள்.

1. You may go to Madras
   நீ பட்டணம் போகலாம்.
2. He may sit on the bench
   அவன் பெஞ்சுமேல் உட்காரலாம்.
3. They may take supper
   அவர்கள் இராப்போஜனம் சாப்பிடலாம்.
4. I may file a petition
   நான் ஒரு பெட்டிஷனை தாக்கல் செய்யலாம்.

கவனிப்பு:—இனி can என்னும் வார்த்தை எவ்வாறு வாக்கியங்களில் பிரயோகப்படுகிறதென்பதை பின்னால் காட்டுகிறோம்.

7-ம் பாடம்.

I can do it நான் அதைச் செய்யக்கூடும்.—இப்பேர்ப்பட்ட வாக்கியங்களை ஒருவன் தன் மனதினாலோ அல்லது சரீர பலத்தினாலோ செய்வதற்கு சக்தியுள்ளவனாயிருக்கும் சந்தர்ப்பங்களில் உபயோகிப்பது பொருத்தமுள்ளதாகும்.

அப்பியாச பாடங்கள்.

1. I can teach well
நான் நன்றாய் போதிக்கக்கூடும்.
2. He can carry the bag
அவன் மூட்டையை சுமக்கக்கூடும்.
3. You can dig a well
நீங்கள் ஒரு கிணற்றைத் தோண்டக்கூடும்.
4. They can cut the tree
அவர்கள் மரத்தை வெட்டக்கூடும்.
5. She can sing well
அவள் நன்றாய் பாடக்கூடும்.

கவனிப்பு:—Well என்னும் வார்த்தைக்கு இரண்டு அர்த்தமுண்டு. அதாவது, 'நன்றாய்' என்றும், 'கிணறு' என்றும் சொல்லலாம். இனி must என்னும் வார்த்தை எவ்வாறு வாக்கியங்களில் உபயோகப்படுகிறதென்பதை பின்னால் காட்டுகிறோம்.

8-ம் பாடம்.

I must go there நான் அங்கே போகவேண்டும். —இப்பேர்ப்பட்ட வாக்கியங்கள் ஓர் காரியத்தின் கட்டாயத்தைக் குறிப்பிடுகிறபோது உபயோகிக்கக்கூடியவைகளாகும்.

அப்பியாச பாடங்கள்.

1. I must complete the work
நான் வேலையை முடிக்கவேண்டும்.
2. You must clear your debts
நீ உன் கடன்களை தீர்க்கவேண்டும்.

3. He must support his father
அவன் தன் தகப்பனை காப்பாற்றவேண்டும்.

4. She must attend her duty
அவள் தன் அலுவலைப் பார்க்கவேண்டும்.

கவனிப்பு:—இனி might have என்பது எவ்வாறு ஒரு இறந்த கால வினையெச்சத்துடன் வாக்கியங்களில் உபயோகப்படுகின்றனவென்பதை பின்னால் காட்டுகிறோம்.

9-ம் பாடம்.

I might have collected the tax நான் வரியை வசூல் செய்திருக்கலாம். (ஆனால் செய்யவில்லை என்றது கருத்து).—இப்பேர்ப்பட்ட வாக்கியங்கள் ஓர் காரியம் செய்ய அனுமதியிருந்தும் செய்யாமல் விட்டுவிட்ட சந்தர்ப்பங்களில் பிரயோகப்படத்தக்கவைகளாகும்.

அப்பியாச பாடங்கள்.

1. You might have settled the matter
நீங்கள் விஷயத்தை தீர்மானித்திருக்கலாம்.

2. He might have gone there
அவன் அங்கே போயிருக்கலாம்.

3. They might have produced the record
அவர்கள் ரிக்கார்டை தாக்கல் செய்திருக்கலாம்.

4. I might have reported the fact
நான் சங்கதியை தெரியப்படுத்தியிருக்கலாம்.

கவனிப்பு:—இனி could have என்பதின் பிரயோகத்தைப்பற்றி பின்னால் கூறுவோம்.

10-ம் பாடம்.

I could have finished the work நான் வேலையை முடித்திருக்கக்கூடும். (ஆனால் முடிக்கவில்லை.) இப்பேர்ப் பட்ட வாக்கியங்கள், செய்ய சக்தியிருந்தும் செய்யாமல் விட்டுவிட்ட சமயங்களில் உபயோகப்படுத்தக்கூடியவை களாகும்.

அப்பியாச பாடங்கள்.

1. I could have done it
   நான் அதைச் செய்திருக்கக்கூடும்.
2. You could have plastered the wall
   நீ சுவரைப் பூசியிருக்கக்கூடும்.
3. He could have studied well
   அவன் நன்றாய் வாசித்திருக்கக்கூடும்
4. We could have built the house
   நாங்கள் அந்த வீட்டை கட்டியிருக்கக்கூடும்.
5. She could have brought the vessel
   அவள் அந்த பாத்திரத்தை கொண்டுவந்திருக்கக்கூடும்.

குறிப்பு :—இனி I have என்பதோடு to என்னும் வார்த்தையை முன்னால் கொண்ட எந்த வினைமுற்றையாவது தொடர்ந்து உபயோகித்தால் வாக்கியம் எவ்வாறு அமையுமென்பதை பின்னால் காட்டுகிறோம்.

11-ம் பாடம்.

I have to go to Tanjore நான் தஞ்சாவூருக்குப் போகவேண்டியிருக்கிறது.—இப்பேர்ப்பட்ட வாக்கியங் கள் ஒரு காரியத்தின் அவசியத்தை குறிப்பிடும்போது ஏற்படக்கூடிய வாக்கியங்களாகும்.

நிகழ்காலம் (PRESENT TENSE).

அப்பியாச பாடங்கள்.

1. I have to go to school
நான் ஸ்கூலுக்குப் போகவேண்டியிருக்கிறது.
2. We have to see the garden
நாங்கள் தோட்டத்தைப் பார்க்கவேண்டியிருக்கிறது.
3. You have to complete the work
நீங்கள் வேலையை முடிக்கவேண்டியிருக்கிறது.
4. They have to produce the record [றது.
அவர்கள் ரிக்கார்டை தாக்கல் செய்யவேண்டியிருக்கி
5. He has to purchase the book
அவன் புஸ்தகத்தை வாங்கவேண்டியிருக்கிறது.

குறிப்பு:—Have என்றதற்கு பதில் had என்பதை அமைத்து இறந்தகாலத்தில் வாக்கியங்களை அமைத்துக்கொள்ளலாம். உதாரணம்: I had to finish my work நான் என் வேலையை முடிக்கவேண்டியிருந்தது.—இது போன்ற வாக்கியங்கள் அமையுமென்பதை கவனிக்க. இனி I am to meet you போன்ற வாக்கியங்கள் எவ்வாறு உபயோகத்தில் வருகின்றனவென்பதை பின்னால் காட்டுகிறோம்.

12-ம் பாடம்.

I am to meet you நான் உங்களை சந்திக்கவிருக்கிறேன்—என்ற வாக்கியத்தில் சந்திக்கிறதென்ற விஷயமானது தீர்மானமாயிருக்கும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் இப்பேர்ப்பட்ட வாக்கியங்கள் உபயோகப்படுகின்றன. ஆகையால் இதை அனுசரித்து அடியில் கண்ட வாக்கியங்களை அப்பியாச பாடங்களில் காட்டுகிறோம்.

அப்பியாச பாடங்கள்.

1. I am to clear my debts
நான் என் கடன்களைத் தீர்க்கவிருக்கிறேன்.

2. You are to collect your outstandings
நீ உன் நிலுவைகளை வசூல் செய்யவிருக்கிருய்.

3. He is to fulfil his promise
அவன் தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றவிருக் [கிருன்.

குறிப்பு:—Am என்பதை வைத்துச் சொல்லியதுபோல, இறந்த காலத்தில் was என்று வைத்தும் வாக்கியங்களை அமைக்கலாம். உதாரணம்: I was to clear my debts நான் என் கடன்களை தீர்க்கவிருந்தேன்—போன்ற வாக்கியங்களைக் கவனிக்க. இனி மேற்கண்ட மாதிரி வாக்கியங்களில் to என்பதற்கு முன்னுல் about என்ற வார்த்தையைப் போட்டு உபயோகித்தால் வாக்கியங்கள் எவ்வாறு அமையுமென்ற விஷயத்தை பின்னுல் காட்டுகிருேம்.

13-ம் பாடம்.

I am about to clear your debts நான் சமீபத்தில் உன் கடன்களைத் தீர்க்கவிருக்கிறேன்,—இப்பேர்ப்பட்ட வாக்கியங்களை, செய்யப்போகிற காரியம் சமீபத்தில் நடக்கப்போகிற சந்தர்ப்பங்களில் மாத்திரம், உபயோகப் படுத்தவேண்டும்.

அப்பியாச பாடங்கள்.

1. I am about to meet you
நான் உன்னை சமீபத்தில் சந்திக்கவிருக்கிறேன்.

2. You are about to lose your life
நீ சமீபத்தில் உன் உயிரை இழக்கவிருக்கிறாய்.

3. He is about to assist his brother
அவன் சமீபத்தில் தன்னுடைய சகோதரனுக்கு உதவி [செய்யவிருக்கிறான்.

4. They are about to start for Bombay
அவர்கள் சமீபத்தில் பம்பாய்க்கு புறப்படவிருக்கிறார் [கள்.

குறிப்பு :– மேற்காட்டியிருக்கும் வாக்கியங்களில் was என்றதை வைத்து இறந்தகாலங்களிலும் வாக்கியங்களை அமைத்துக் கொள்ளலாம். இனி I am about to clear your debts என்ற வாக்கியத்தில் "about" என்ற வார்த்தையை எடுத்துவிட்டு "likely" என்ற வார்த்தையைப் போட்டு உபயோகித்தால் வாக்கியங்கள் எவ்வாறு அமையுமென்பதைப் பற்றி பின்னால் காட்டுகிறோம்.

14-ம் பாடம்.

I am likely to incur loss எனக்கு நஷ்டம் வரும் போலிருக்கிறது; அதாவது, நான் நஷ்டத்தை அடைவேன்போலிருக்கிறேன்.—இப்பேர்ப்பட்ட வாக்கியங்கள் ஒரு காரியமானது பின்னால் ஏற்படக்கூடுமென்ற விஷயமானது திட்டமாயூகித்தறியும் சந்தர்ப்பங்களில் உபயோகிக்கக்கூடியவைகளாகும்.

அப்பியாச பாடங்கள்.

I. I am likely to pass the examination.
எனக்கு பரீக்ஷை தேறும்போலிருக்கிறது.

2. You are likely to get an appointment.
   உனக்கு ஒரு உத்தியோகம் கிடைக்கும்போலிருக்கிறது.
3. He is likely to undergo difficulties.
   அவனுக்குக் கஷ்டங்கள் வரும்போலிருக்கிறது.
4. They are likely to receive presents.
   அவர்களுக்கு இனாம் கிடைக்கும்போலிருக்கிறது.

குறிப்பு :—மேற்கண்ட வாக்கியங்களில் was என்பதை வைத்தும் இறந்தகாலத்தில் சொல்லலாம். இனி ஒரு எழுவாயுடன் ought to go என்றதைப்போன்ற வினைகள் எவ்வாறு உபயோகத்தில் வருகின்றன வென்பதை பின்னால் காட்டுகிறோம்.

15-ம் பாடம்.

I ought to go நான் போகவேண்டும்.—இப்போர்ப்பட்ட வாக்கியங்கள் ஒரு காரியம் செய்யக் கடமைப்பட்டிருக்கும் விஷயங்களில் உபயோகப்படுத்தக் கூடியவைகளாகும்.

அப்பியாச பாடங்கள்.

1. I ought to do that work.
   நான் அந்த வேலையைச் செய்யவேண்டும்.
2. You ought to teach the lesson.
   நீ பாடத்தைக் கற்பிக்கவேண்டும்.
3. He ought to go to Madura.
   அவன் மதுரைக்குப் போகவேண்டும்.
4. They ought to bear the loss.
   அவர்கள் நஷ்டத்தைப் பொறுக்கவேண்டும்.

குறிப்பு :—மேற்கண்ட வாக்கியங்களில் "ought to" என்றதற்குப் பதில் "should" என்ற வார்த்தையைப் போட்டு உபயோகித்தாலும் ஒரே அர்த்தத்தைத்தான் கொடுக்கும். இனி ought to do என்றதில் to என்பதற்குப் பின்னால் have என்ற வினையைச் சேர்த்தால் எம்மாதிரி வாக்கியங்கள் அமையுமென்பதைப் பின்னால் காட்டுகிறோம்.

16-ம் பாடம்.

I ought to have done நான் செய்திருக்கவேண்டும். (ஆனால் செய்யவில்லை.)—இப்பேர்ப்பட்ட வாக்கியங்களானது ஒரு மனிதன் தான் செய்யவேண்டிய வேலையைச் செய்யாமல் விட்டுவிட்ட சமயங்களில் உபயோகப்படுத்த வேண்டுமேதவிர மற்ற சமயங்களில் உபயோகப்படுத்தக் கூடாது.

அப்பியாச பாடங்கள்.

1. I ought to have submitted the account
நான் கணக்கை அனுப்பியிருக்கவேண்டும்.
2. You ought to have gone there
நீ அங்கே போயிருக்கவேண்டும்.
3. He ought to have finished the work
அவன் வேலையை முடித்திருக்கவேண்டும்.
4. They ought to have cleared the debts
அவர்கள் கடன்களைத் தீர்த்திருக்கவேண்டும்.

குறிப்பு :—மேற்கண்ட வாக்கியங்களில் "ought to" என்றதற்கு பதில் "should have" என்ற வார்த்தைகளைப் போட்டு உபயோகித்தாலும், ஒரே அர்த்தத்தைத்தான் கொடுக்கும். இனி do என்ற வார்த்தையானது மூவிடங்களிலும் எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் உபயோகப்படுகின்றனவென்பதை பின்னால் காட்டுகிறோம்.

17-ம் பாடம்.

Do என்ற வார்த்தையானது கேள்விகள் கேட்கும்படியான சந்தர்ப்பங்களில் அடியில் கண்டவாறு உபயோகப்படுகின்றது. உதாரணம்:—

Do I cheat	நான் ஏமாற்றுகிறேனா?
Do you go	நீ போகிறாயா?
Does he come	அவன் வருகிறானா?

குறிப்பு:—தன்மைக்கும் முன்னிலைக்கும் எழுவாய் பயனிலை அமைத்துக்கொண்டு அதற்குமுன்னால் do என்பதை வைத்துச் சொன்னால் மேற்கண்ட மாதிரி வாக்கியங்கள் ஏற்படும். படர்க்கையிடமாகிய he, she, it என்பதற்கு does என்பதை முன்னால் வைத்துச் சொல்லவேண்டுமென்பதை ஞாபகத்தில் வைக்கவும்.

அப்பியாசபாடம்.

Do I like it	நான் அதை விரும்புகிறேனா?
Do you take the bag	நீ மூட்டையை எடுக்கிறாயா?
Does he give it	அவன் அதைக் கொடுக்கிறானா?
Does she attend the meeting	அவள் மீட்டிங்கை கவனிக்கிறாளா?

இனி did என்பது எவ்வாறு உபயோகப்படுகிறதென்பதை பின்னால் காட்டுகிறோம்.

இறந்தகாலம் (Past Tense).

Do என்பதைப்போலவே did என்பதும் இறந்தகாலத்தில் கேள்வி கேட்க பிரயோஜனப்படுகிறது.

உதாரணம்.

Did I cheat	நான் ஏமாற்றினேனா?
Did you go	நீ போனாயா?
Did he come	அவன் வந்தானா?

குறிப்பு :—Do என்பதைப்போலவே did என்பதையும் வாக்கியத்தின் முதலில் வைத்துச் சொல்லவேண்டியது. இறந்தகாலத்தின் அடையாளமாக did என்பதை எப்பொழுது உபயோகித்துவிட்டோமோ அப்பொழுது cheat, go, come என்ற வினைகளை இறந்தகாலத்தில் வேறுவிதமாய் மாற்றிச் சொல்லவேண்டிய அவசியமில்லை என்பதை யறிக.

அப்பியாச பாடங்கள்.

Did I send him	நான் அவனை அனுப்பினேனா?
Did you see my son	நீ என் மகனை பார்த்தாயா?
Did he go to Madras	அவன் சென்னைக்குப் போனானா?
Did they bring the records	அவர்கள் ரிக்கார்டுகளைக் கொண்டுவந்தார்களா?

இனி செய்வினை (Active voice), செயப்பாட்டுவினை (Passive voice) இவைகளைப்பற்றி பின்னால் விவரித்துக் காட்டுகிறோம்.

Active and Passive Voice.

செய்வினை, செயப்பாட்டுவினைப் பிரயோகங்கள்.

வினைச்சொல்லில் Transitive Verb (செயப்படுபொருளுள்ள வினை) என்றும், Intransitive Verb (செயப்படுபொருளில்லாத வினை) என்றும் இரண்டு வகையுண்டு.

இதைப்பற்றி நாம் 1-வது வாலியத்தில் விரிவாய்ச் சொல்லியிருக்கிறோம். ஆனால் Transitive Verb-க்கு மாத்திரம் Active Voice (செய்வினை) Passive Voice (செயப்பாட்டு வினை) என இருவித பிரயோகங்கள் உண்டு, அதைப்பற்றி பின்னால் விவரமாய் உதாகரித்துக் காட்டுகிறோம்:

உதாரணம் 1.

நிகழ்காலம்.

ACTIVE: He likes me
அவன் என்னை விரும்புகிறான்.

PASSIVE: I am liked by him
நான் அவனால் விரும்பப்படுகிறேன்.

இறந்தகாலம்.

ACTIVE: He liked me
அவன் என்னை விரும்பினான்.

PASSIVE: I was liked by him
நான் அவனால் விரும்பப்பட்டேன்.

எதிர்காலம்.

ACTIVE: He will like me
அவன் என்னை விரும்புவான்.

PASSIVE: I shall be liked by him
நான் அவனால் விரும்பப்படுவேன்.

குறிப்பு:—மேற்கண்ட வாக்கியங்களிலுள்ள பயனிலையை மூன்று காலங்களிலும் அமைத்துக் காட்டியிருக்கிறது. அதாவது,

செய்வினையானது செயப்பாட்டு வினையாக மாறுவதில் அடியிற்கண்ட விதிகளைக் கவனிக்கவேண்டும் :—

(1) செய்வினையிலுள்ள எழுவாயாகிய he என்பது, him என்று செயப்படுபொருளாகவும், me என்னும் செயப்படுபொருளானது I என்று எழுவாயாகவும் மாறுகிறது. இப்படி மாறுவதில் செயப்படுபொருளாக வரும் வார்த்தைக்கு முன்னால் by என்னும் வார்த்தையை கூடச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

(2) பயனிலையானது செய்வினையில் நிகழ்காலத்திலிருந்தால் அது செயப்பாட்டு வினையாக மாறும்போது ஷை நிகழ்கால வினைமுற்றை இறந்தகாலவினையெச்சமாக மாற்றிக்கொண்டு அதற்கு முன்னால் am, are, is இம்மூன்றிலொன்றை எழுவாயிலிருக்கிற எண் இடமறிந்து முன்னாலமைத்துச் சொல்ல வேண்டும். (இது விஷயமாய் வினைச்சொல் 1-வது பாடத்தின்கீழ் கொடுத்திருக்கிற விதிகளைக் கவனிக்க.)

(3) செய்வினையிலுள்ள பயனிலையானது மேற்கண்ட 2-வது மாதிரியில் காட்டியபடி இறந்தகாலத்திலிருந்தால் அதை இறந்தகால வினையெச்சமாக மாற்றிக்கொண்டு அதற்கு முன்னால் was, were இவ்விரண்டிலொன்றை எழுவாயின் தன்மைக்குத் தக்கபடி முன்னாலமைத்துச் சொலலவேண்டும். (சில வினைகள் இறந்தகாலத்திலும், இறந்தகால வினையெச்சத்திலும் ஒரே மாதிரியாகவும், பல மாதிரியாகவும் உபயோகத்தில் வருவதை ஆங்கிலபோதினி 1-வது வாலியம் 97, 98 பக்கங்களைப் பார்க்க).

(4) செய்வினையிலுள்ள பயனிலையானது எதிர்காலத்திலிருந்தால் அதன் முக்கிய வினையை மேற்சொல்லியபடி இறந்தகால வினையெச்சமாக்கிக்கொண்டு அதற்குமுன்னால் shall be அல்லது will be என்றதை எழுவாயின் தன்மைக்குத் தக்கபடி சேர்த்து அமைத்துச் சொல்லவேண்டியது. இனி முக்-

காலங்களிலும் ஷ பிரயோகத்தின் அநுபோகத்தை பின் வருமாறு அப்பியாச பாடங்களில் காட்டுகிறோம்.

அப்பியாச பாடங்கள்.

1. ACTIVE. He loves me
அவன் என்னை நேசிக்கிறான்.
Passive. I am loved by him
நான் அவனால் நேசிக்கப்படுகிறேன்.

2. ACTIVE. The cow drinks water
பசு தண்ணீரைக் குடிக்கிறது.
Passive. Water is drunk by the cow
தண்ணீர் பசுவால் குடிக்கப்படுகிறது.

3. ACTIVE. The constable arrests them.
கான்ஸ்டேபிள் அவர்களைக் கைதிசெய்கிறான்.
PASSIVE. They are arrested by the constable.
அவர்கள் கான்ஸ்டேபிளால் கைதிசெய்யப்படுகி [றார்கள்.

4. ACTIVE. The Magistrate framed the charge.
மாஜிஸ்டிரேட்டு குற்றத்தை ஸ்தாபித்தார்.
PASSIVE. The charge was framed by the Magistrate. [டது.
குற்றமானது மாஜிஸ்டிரேட்டால் ஸ்தாபிக்கப்பட்

5. ACTIVE. Cats killed rats.
பூனைகள் எலிகளைக் கொன்றன.
PASSIVE. Rats were killed by cats.
எலிகள் பூனைகளால் கொல்லப்பட்டன.

6. ACTIVE. He will attend the business.
அவன் வேலையைக் கவனிப்பான்.

PASSIVE. The business will be attended by him.
வேலை அவனால் கவனிக்கப்படும்.

குறிப்பு :—I, we, he, she முதலியவைகள் செயப்படுபொருளாக மாறும்போது, முறையே me, us, him, her என்று மாறுவதோடு, it, they முதலியவைகளும் it, them என்று மாறுவதைக் கவனிக்க. இவைகளைத்தவிர மற்றவைகள் எழுவாயாகவாவது, செயப்படுபொருளாகவாவது மாறும்போது எவ்வித மாறுபாடன்றியில் அப்படியே பிரயோகிக்கப்படுமென்பதை கவனிக்க.

உதாரணம் 2.

நிகழ்காலம்.

1. ACTIVE. I am arresting him.
நான் அவனைக் கைதிசெய்துகொண்டிருக்கிறேன்.

PASSIVE. He is being arrested by me.
அவன் என்னால் கைதிசெய்யப்பட்டுக்கொண்டி[ருக்கிறான்.

2. ACTIVE. He is searching me.
அவன் என்னைத் தேடிக்கொண்டிருக்கிறான்.

PASSIVE. I am being searched by him.
நான் அவனால் தேடப்பட்டுக்கொண்டிருக்கிறேன்.

3. ACTIVE. I am making arrangements.
நான் ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறேன்.

PASSIVE. Arrangements are being made by me.
ஏற்பாடுகள் என்னால் செய்யப்பட்டுக்கொண்டி[ருக்கின்றன.

இறந்தகாலம்.

1. ACTIVE. I was arresting him.
நான் அவனைக் கைதி செய்துகொண்டிருந்தேன்.

PASSIVE. He was being arrested by me. [ருந்தான்.
அவன் என்னால் கைதி செய்யப்பட்டுக்கொண்டி

2. ACTIVE. We were sending the goods. [தோம்.
நாங்கள் சாமான்களை அனுப்பிக்கொண்டிருந்

PASSIVE. The goods were being sent by us.
சாமான்கள் எங்களால் அனுப்பப்பட்டுக்கொண்
[டிருந்தன.

குறிப்பு:—முன் சொல்லியமாதிரி எழுவாயை செயப்படுபொருளாகவும், செயப்படுபொருளை எழுவாயாகவும் மாற்றிக்கொண்டு, செய்வினையிலிருக்கும் பயனிலையாகிய arresting என்னும் வார்த்தையை being arrested என்று மாற்றிக்கொண்டு அப்பால் எழுவாயானது இருக்கும் இடம், எண், காலம் இவைகளுக்குத் தகுந்தபடி am, are, is, was, were இவைகளில் எதையாவது மாற்றப்பட்டிருக்கும் வினைக்கு முன்னால் அமைத்துக்கொள்ளவேண்டும். இதை அநுசரித்துப் பின்னால் அப்பியாச பாடங்களைக் கொடுக்கிறோம்.

அப்பியாச பாடங்கள்.

1. ACTIVE. He is liking me
அவன் என்னை விரும்பிக்கொண்டிருக்கிறான்.

PASSIVE. I am being liked by him [றேன்.
நான் அவனால் விரும்பப்பட்டுக்கொண்டிருக்கி

2. ACTIVE. We are calling them [றோம்.
நாங்கள் அவர்களைக் கூப்பிட்டுக்கொண்டிருக்கி

PASSIVE. They are being called by us [ருக்கிறார்கள்.
அவர்கள் எங்களால் கூப்பிடப்பட்டுக்கொண்டி

3. ACTIVE. I am teaching the lesson
நான் பாடத்தை கற்பித்துக்கொண்டிருக்கிறேன்.

PASSIVE. The lesson is being taught by me [றது.
பாடம் என்னால் கற்பிக்கப்பட்டுக்கொண்டிருக்கி

4. ACTIVE. The Inspector was enquiring the case
இன்ஸ்பெக்டர் கேஸை விசாரித்துக்கொண்டிருந்
[தார்.

PASSIVE. The case was being enquired by the Inspector [டிருந்தது.
கேசு இன்ஸ்பெக்டரால் விசாரிக்கப்பட்டுக்கொண்

5. ACTIVE. They were collecting the arrears [கள்.
அவர்கள் வரிகளை வசூல் செய்துகொண்டிருந்தார்

PASSIVE. The arrears were being collected by them
வரிகள் அவர்களால் வசூலிக்கப்பட்டுக்கொண்டி
[ருந்தன.

துறிப்பு:—மேற்கண்ட மாதிரியான வாக்கியங்கள் எதிர்காலத்தில் செயப்பாட்டுவினைகளில் உபயோகத்தில் வராமலிருப்பதால் அதைப்பற்றி நாம் எடுத்துக்கூறவில்லை. இனி 3-வது உதாரணத்தை பின்னால் காட்டுகிறோம்.

உதாரணம் 3.

நிகழ்காலம்.

ACTIVE. You have arrested me
நீ என்னை கைதி செய்திருக்கிறாய்.

PASSIVE. I have been arrested by you
நான் உன்னால் கைதி செய்யப்பட்டிருக்கிறேன்.

இறந்தகாலம்.

ACTIVE. You had given the book
நீங்கள் புஸ்தகத்தைக் கொடுத்திருந்தீர்கள்.

PASSIVE. The book had been given by you
புஸ்தகம் உங்களால் கொடுக்கப்பட்டிருந்தது.

எதிர்காலம்.

ACTIVE. She will have given a box
அவள் ஒரு பெட்டியை கொடுத்திருப்பாள்.

PASSIVE. A box will have been given by her
ஒரு பெட்டி அவளால் கொடுக்கப்பட்டிருக்கும்.

குறிப்பு :—முன்காட்டியபடி எழுவாய் செயப்படுபொருள் இவைகளை மாற்றிக்கொண்டு அப்பால் செய்வினையிலிருக்கும் பயனிலையாகிய have arrested என்பதை have been arrested என்று மாற்றிக்கொள்ளவேண்டும். அப்பால் எழுவாயானது இருக்கும் இடம் (person), எண் (number), காலம் (tense) இவைகளைக் கவனித்து have, has, had, will have அல்லது shall have முதலியவைகளை been என்பதற்கு முன்னால் அமைத்துக்கொள்ளவும்.

அப்பியாச பாடங்கள்.

1. ACTIVE. We have sent you
   நாங்கள் உன்னை அனுப்பியிருக்கிறோம்.
   PASSIVE. You have been sent by us
   நீ எங்களால் அனுப்பப்பட்டிருக்கிறாய்.

2. ACTIVE. They have seen it
   அவர்கள் அதைப் பார்த்திருக்கிறார்கள்.
   PASSIVE. It has been seen by them
   அது அவர்களால் பார்க்கப்பட்டிருக்கிறது.

3. ACTIVE. He has liked them
   அவன் அவர்களை விரும்பியிருக்கிறான்.
   PASSIVE. They have been liked by him
   அவர்கள் அவனால் விரும்பப்பட்டிருக்கிறார்கள்.

4. ACTIVE. She had written a letter
   அவள் ஒரு கடிதத்தை எழுதியிருந்தாள்.
   PASSIVE. A letter had been written by her
   ஒரு கடிதம் அவளால் எழுதப்பட்டிருந்தது.

5. ACTIVE. I shall have cleared the debts
   நான் கடன்களை தீர்த்திருப்பேன்.
   PASSIVE. The debts will have been cleared by me
   கடன்கள் என்னால் தீர்க்கப்பட்டிருக்கும்.

குறிப்பு:—இனி may என்னும் வார்த்தையானது மற்ற வினைகளுடன் சேர்ந்து செய்வினை, செயப்பாட்டுவினைகளில் எவ்வாறு பிரயோகிக்கப்படுகின்றனவென்பதை பின்னால் காட்டுகிறோம்.

உதாரணம் 4.

மாதிரி 1.

ACTIVE. I may send the letter
நான் லெட்டரை அனுப்பலாம்.

PASSIVE. The letter may be sent by me
லெட்டர் என்னால் அனுப்பப்படலாம்.

குறிப்பு :—இப்பேர்ப்பட்ட வாக்கியங்கள் செய்வினையிலிருந்து செயப்பாட்டுவினையாய் மாறும்போது may என்பதை may be என்று வைத்துக்கொண்டு பிரதான வினைமுற்றாகிய send என்பதை sent என்று இறந்தகால வினையெச்சமாக மாற்றி அப்பால் may be sent என்று அமைத்துச் சொல்ல வேண்டும். இனி might have என்பதை வைத்துப் பிரயோகிக்கும் விதம் பின் வருமாறு.

மாதிரி 2.

ACTIVE. You might have seen it
நீ அதைப் பார்த்திருக்கலாம்.

PASSIVE. It might have been seen by you
அது உன்னால் பார்க்கப்பட்டிருக்கலாம்.

குறிப்பு :—மேற்கண்ட வாக்கியத்தில் might have என்பதோடு been என்பதைச் சேர்த்துக்கொண்டு அப்பால் seen என்னும் வினையெச்சத்தையும் சேர்த்து உபயோகிக்கவேண்டியது தான். இனி may, might have இவைகளை உபயோகித்த மாதிரியே can, could have, என்னும் வார்த்தைகளையும் அதே மாதிரி அமைத்தும் உபயோகிக்கலாம். இது விஷயமாய் பின்வரும் அப்பியாச பாடங்களைப் பார்க்க.

அப்பியாச பாடங்கள்.

1. ACTIVE. I may purchase the article.
நான் சாமானை வாங்கலாம்.

PASSIVE. The article may be purchased by me.
சாமான் என்னால் வாங்கப்படலாம்.

2. ACTIVE You might have committed the mischief.
நீ விஷமத்தைச் செய்திருக்கலாம்.

PASSIVE. The mischief might have been committed by you.
விஷமம் உன்னால் செய்யப்பட்டிருக்கலாம்.

3. ACTIVE. He can see my mother.
அவன் என் தாயாரைப் பார்க்கக்கூடும்.

PASSIVE. My mother can be seen by him.
என் தாயார் அவனால் பார்க்கப்படக்கூடும்.

4. ACTIVE. He could have made the box.
அவன் அந்தப் பெட்டியை செய்திருக்கக்கூடும்.

PASSIVE. The box could have been made by him.
அந்தப்பெட்டி அவனால் செய்யப்பட்டிருக்கக் கூடும்.

குறிப்பு:—இனி நாம் 12-வது பாடத்தில் காட்டியிருக்கிறபடி I am to meet you போன்ற வாக்கியங்கள் செயப்பாட்டு வினையில் எவ்வாறு பிரயோகப்படுகின்றன வென்பதைப் பின்னால் காட்டுகிறோம்.

உதாரணம் 5.

நிகழ்காலம்.

ACTIVE. I am to meet you.
நான் உன்னை சந்திக்கவிருக்கிறேன்.

PASSIVE. You are to be met by me.
நீ என்னால் சந்திக்கப்படவிருக்கிறாய்.

இறந்தகாலம்.

ACTIVE. He was to meet you.
அவன் உங்களைச் சந்திக்கவிருந்தான்.

PASSIVE. You were to be met by him.
நீங்கள் அவனால் சந்திக்கப்படவிருந்தீர்கள்.

குறிப்பு:—*மேற்கண்ட வாக்கியங்களில் எழுவாய் செயப்படு பொருள் இவைகளை மாற்றிக்கொண்டு அப்பால் செய்வினையிலிருக்கும்* "to meet" *என்றதில்* to *என்பதற்குப் பின்* be *என்பதைச் சேர்த்துக்கொள்வதோடு,* meet *என்னும் வினையை* met *என்று இறந்தகாலவினையெச்சமாக மாற்றி, கடைசியில்* "to be met" *என்று அமைத்துக்கொள்ள வேண்டும். இதன்மேல் எழுவாயின் தன்மைக்குத் தக்கபடி,* am, are, is, was, were *இவைகளில் எதையாவது சந்தர்ப்பமறிந்து எழுவாய்க்குப்பின் அமைத்துக்கொள்ள வேண்டியதைப்பற்றி மறுபடியும் கூறினோம்.*

அப்பியாச பாடங்கள்.

1. ACTIVE. I am to sell the land.
நான் நிலத்தை விற்கவிருக்கிறேன்.
PASSIVE. The land is to be sold by me.
நிலம் என்னால் விற்கப்படவேண்டியிருக்கிறது.

2. ACTIVE. He is to clear my debts.
அவன் என் கடன்களைத் தீர்க்கவிருக்கிறான்.
PASSIVE. My debts are to be cleared by him.
என் கடன்கள் அவனால் தீர்க்கப்படவேண்டியிருக்கின்றன.

3. You were to collect the tax.
நீ வரியை வசூல் செய்யவிருந்தாய்.

PASSIVE. The tax was to be collected by you.
வரி உன்னால் வசூலிக்கப்படவேண்டியிருந்தது.

இனி செயப்படுபொருளைக் காட்டாமலும் சில சமயங்களில் வாக்கியங்களை அமைத்துச் சொல்லலாமென்ற விஷயத்தைப் பின்னால் காட்டுகிறோம்.

உதாரணம் 6.

A report was submitted (by him) to the Collector ஒரு ரிப்போர்ட்டு கலெக்டருக்கு அனுப்பப்பட்டது.—இந்தச் செயப்பாட்டுவினைப் பிரயோக வாக்கியத்தில் செயப்படுபொருள் ஸ்தானத்திலுள்ள "by him" என்னும் வார்த்தையை வெளிப்படுத்தாமலும் வாக்கியங்களை அமைத்துச் சொல்லலாம்; அப்படிச் சொன்னபோதிலும் அது தொக்கி நிற்பதாகத்தான் தாத்பரியம். இது விஷயமாய் அடியிற்கண்ட அப்பியாச பாடத்திலுள்ள வாக்கியங்களைக் கவனிக்க.

அப்பியாசபாடம்.

1. He was appointed as Union Chairman.
அவர் யூனியன் சேர்மனாக நியமிக்கப்பட்டார்.

2. The records were called for in the case.
கேஸில் ரிக்கார்டுகள் வரவழைக்கப்பட்டன.

3. The books are being reprinted at present.
புஸ்தகங்கள் தற்காலம் மறுபடியும் அச்சடிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

4. He has been fined one rupee. [கிறார்.
அவர் ஒரு ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்

5. The prisoners were released on bail. [ர்கள்.
கைதிகள் ஜாமீன்பேரில் விடுதலை செய்யப்பட்டா

கவனிப்பு :—எழுதுகிறவர் அல்லது பேசுகிறவருடைய யுக்தப்படி செயப்பாட்டுவினை - வாக்கியத்திலுள்ள செயப்படுபொருள் ஸ்தானத்தின் வார்த்தைகளை உசிதமறிந்து வேண்டுமானால் வெளிப்படுத்தவும் செய்யலாம். உதாரணமாக மேலே காட்டியிருக்கும் 1-வது வாக்கியத்தில் by the President என்றும், 2-வதில் by the judge என்றும், 3-வதில் by the manager என்றும், 4-வதில் by the Tahsildar என்றும், 5-வதில் by the Sub-Magistrate என்றும் மாதிரிக்காக அமைத்துப் பார்த்துக்கொள்ளவும். இனி I have loved என்ற வாக்கியத்திற்கும், I am loved என்ற வாக்கியத்திற்கும் அர்த்தத்தில் என்ன பேதமிருக்கிறதென்ற விஷயத்தை பின்னால் காட்டுகிறோம்.

I have loved நான் நேசித்திருக்கிறேன்.

I am loved நான் நேசிக்கப்படுகிறேன்.

மேற்கண்ட இரண்டு வாக்கியங்களுக்குமுள்ள பேதமென்னவென்றால், முதலாவது வாக்கியத்தில் தொழிலானது கர்த்தாவை விட்டு வேறொன்றைக் குறித்து நிற்கின்றது. இரண்டாவது வாக்கியத்திலோ தொழிலானது கர்த்தாவையே சார்ந்து நிற்கின்றது. ஆகையால் ஒரு இறந்தகால வினையெச்சத்துடன் have அல்லது had வைத்துச்சொன்னால் தொழிலானது கர்த்தாவை விட்டு வேறொன்றைக் குறித்து நிற்குமென்றும், am, is, was, were முதலியவைகளை வைத்துச் சொன்னால் கர்த்தாவையே சேருமென்றும் அறிந்துகொள்ளவும்.

Sentences connected by Relative Pronouns.
சம்பந்த பிரதிப்பெயரேச்ச வாக்கியங்கள்.

1. லெட்டரை எழுதுகிற மனிதன் The man who writes the letter.
2. பாலைக் கொடுக்கிற பசு The cow which gives milk.

பெயர்ச்சொல்லைக்கொண்டு முடியும் எச்சம், பெயரெச்சம் என்று சொல்லப்படும். மேற்கண்ட வாக்கியங்களில் "எழுதுகிற" என்னும் வினையானது 'மனிதன்' என்னும் பெயரையும், "கொடுக்கிற" என்னும் வினையானது 'பசு' என்னும் பெயரையும் கொண்டு முடிவதால் இப்பேர்ப்பட்ட வினைச்சொற்கள் பெயரெச்சம் என்று சொல்லப்படும். இப்பேர்ப்பட்ட பெயரெச்ச வாக்கியங்களை இங்கிலீஷ் படுத்தும்போது, வினைச்சொல்லானது எதில் முடிகிறதோ அதை முதலிலும், அப்பால் வினைச்சொல்லுக்கும், (மூன்றுவது) செயப்படுபொருளுக்கும் இங்கிலீஷ் அமைக்கவேண்டும். உதாரணமாக: முதலாவது வாக்கியத்தில் 'மனிதன்' என்பதற்கு the man என்றும், 'எழுதுகிற' என்பதற்கு who writes என்றும், 'லெட்டரை' என்பதற்கு the letter என்றுமமைத்துச் சொல்வதில் the man who writes the letter என்று ஏற்படுகிறது. இத்தன்மையான வாக்கியங்களைச் சேர்க்கிறபோது பெயரெச்சமாய் முடிகிற வினைகள் மனிதர்களைக் கொண்டு முடியும்போது அந்த வினையுடன் who என்ற சம்பந்தப் பிரதிப்பெயரையும் (Relative Pronoun), ஷை வினையானது மனிதர்களைத்தவிர மற்ற எல்லாவற்றையும் கொண்டு முடிகிறபோது இரண்டாவது உதாரணத்தில் காட்டியபடி which என்னும் சம்பந்தப் பிரதிப்பெயரையும், வினைகளுக்கு முன்னல் அமைத்து வாக்கியங்களைச்

சேர்க்கவேண்டும். இவ்விதமாய் பெயரொச்சமாக Transitive verb-உம், Intransitive verb-உம் நிகழ்கால இறந்தகாலங்களில் உபயோகத்தில் வருகிறதில் நாம் முதலில் Transitive verb ஆனது பெயரொச்சமாக செய்வினை (Active voice) செயப்பாட்டு வினைகளில் (Passive voice) பிரயோகப்படும் பல மாதிரிகளை பின்னால் காட்டுகிறோம்.

உதாரணம் 1.

நிகழ்காலம் (PRESENT INDEFINITE).

மாதிரி 1.

ACT. *லெட்டரை எழுதுகிற மனிதன்*
The man who writes the letter.

PAS. *மனிதனால் எழுதப்படுகிற லெட்டர்*
The letter which is written by the man.

நிகழ்காலம் (PRESENT CONTINUOUS).

மாதிரி 2.

ACT. *லெட்டரை எழுதிக்கொண்டிருக்கிற மனிதன்*
The man who is writing the letter.

PAS. *மனிதனால் எழுதப்பட்டுக்கொண்டிருக்கிற லெட்டர்*
The letter which is being written by the man.

நிகழ்காலம் (PRESENT PERFECT.)

மாதிரி 3.

ACT. *லெட்டரை எழுதியிருக்கிற மனிதன்*
The man who has written the letter.

PAS. *மனிதனால் எழுதப்பட்டிருக்கிற லெட்டர்*
The letter which has been written by the man.

நிகழ்காலம் (PRESENT INFINITIVE FORM).

மாதிரி 4.

ACT. லெட்டரை எழுதவிருக்கிற (அல்லது எழுதப் போகிற) மனிதன்
The man who is to write the letter.

PAS. மனிதனால் எழுதப்படப்போகிற லெட்டர்
The letter which is to be written by the man.

குறிப்பு:—செய்வினையிலிருந்து செயப்பாட்டு வினையாக வாக்கியங்கள் மாறுவதைப்பற்றி Active, Passive Voice-களின் கீழ் நாம் கூறியிருக்கும் விதிகளைக் கவனிக்க. இனி மேற் காட்டியிருக்கும் பெயரெச்ச வாக்கியங்களை இறந்தகாலத்தில் வைத்து பின்னால் காட்டுகிறோம்.

இறந்தகாலம்.

மாதிரி 1.

ACT. லெட்டரை எழுதின மனிதன்
The man who wrote the letter.

PAS. மனிதனால் எழுதப்பட்ட லெட்டர்
The letter which was written by the man.

குறிப்பு:—மேலே Passive Voice-ல் காட்டியிருக்கும் வாக்கியத்தில் which was என்பதை நீக்கி the letter written by the man என்று சொல்வதுமுண்டு.

மாதிரி 2.

ACT. லெட்டரை எழுதிக்கொண்டிருந்த மனிதன்
The man who was writing the letter.

PAS. மனிதனால் எழுதப்பட்டுக்கொண்டிருந்த லெட்டர்
The letter which was being written by the man.

குறிப்பு :—மேலே காட்டியிருக்கும் செயப்பாட்டுவினைப் பிரயோக வாக்கியத்தில் which was என்பதை நீக்கி the letter being written by the man என்று சொல்வதுமுண்டு.

மாதிரி 3.

ACT. லெட்டரை எழுதியிருந்த மனிதன்
The man who had written the letter.

PAS. மனிதனால் எழுதப்பட்டிருந்த லெட்டர்
The letter which had been written by the man.

குறிப்பு :—செயப்பாட்டு வினையில் have been, has been, had been இவைகளில் அமைக்கப்பட்ட வாக்கியங்கள் எவ்விதமும் 2-வது மாதிரியில் காட்டியபடி நீக்கக் கூடியவைகளல்ல

மாதிரி 4.

ACT. லெட்டரை எழுதவிருந்த (எழுதப்போன) மனிதன்
The man who was to write the letter.

PAS. மனிதனால் எழுதப்படப்போன லெட்டர்
The letter which was to be written by the man.

குறிப்பு :—மேலே Passive Voice-ல் காட்டியிருக்கும் which was என்பதை நீக்கி the letter to be written by the man என்று சொல்வதுமுண்டு. பொதுவாய் இறந்தகாலத்தில் who was என்றும், which was என்றும் பிரயோகப்படுகிற சம்பந்தப் பிரதிப் பெயர்கள் வெகுவாய் நீக்கப்பட்டே உபயோகத்தில் வருகிறவிதம் காண்க. இது விஷயமாய் அப்பியாச பாடங்களை பின்னால் கொடுக்கிறோம்.

அப்பியாச பாடங்கள்.

இறந்தகாலம்.

மாதிரி 1.

1. The man arrested by the Police.
   போலீசாரால் அரெஸ்டு செய்யப்பட்ட மனிதன்.

2. The prisoner convicted by the Magistrate.
   மாஜிஸ்டிரேட்டால் தண்டிக்கப்பட்ட கைதி.

3. The record produced by the accused.
   எதிரியால் தாக்கல் செய்யப்பட்ட ரிக்கார்டு.

மாதிரி 2.

4. The letter being written by the clerk.
   குமாஸ்தாவால் எழுதப்பட்டுக்கொண்டிருந்த [லெட்டர்.

5. The chair being made by the carpenter.
   தச்சனால் செய்யப்பட்டுக்கொண்டிருந்த நாற்காலி.

மாதிரி 4.

6. The record to be sent by the Inspector.
   இன்ஸ்பெக்டரால் அனுப்பப்படவேண்டிய ரிக் [கார்டு.

7. The work to be completed by the contractor.
   கண்ட்ராக்டரால் முடிக்கப்படவேண்டிய வேலை
   (அல்லது முடிக்கப்படவிருந்த வேலை.)

8. The explanation to be offered by the clerk.
குமாஸ்தாவால் கொடுக்கப்படவேண்டியிருந்த [தகவல்விபரம்.

குறிப்பு :—மேற்கண்டவைகள் யாவையும் 1-வது உதாரணத்தின் கீழ் காட்டினோம். இனி 2-வது உதாரணத்தைப்பற்றிப் பின்னால் விவரிப்போம்.

உதாரணம் 2.

நான் வாங்கின சிலேட் வீட்டிலிருக்கிறது. The slate which I purchased is in the house.—அதாவது, நான் சிலேட்டை வாங்கினேன் ; அது வீட்டிலிருக்கிறது —என்பது கருத்து. இந்த வாக்கியத்தில் "அது" என்பதானது செயப்படுபொருளாகிய சிலேட்டைக் குறிக்கிறது. இவ்விதமாய் மேற்காட்டியபடி ஒரு வாக்கியத்தின் முதலில் slate என்னும் செயப்படுபொருளை யமைத்து பின்னால் எழுவாய் பயனிலையாகிய I purchased என்பது வரும்போது மத்தியில் who அல்லது which என்னும் சம்பந்தப் பிரதிப்பெயர்களைக் காட்டவேண்டிய அவசியமில்லை ஆகவே, "The slate I purchased is in the house" என்று சொல்வதே போதுமானது.

அப்பியாச பாடங்கள்.

ACTIVE. The merchant he met.
அவன் சந்தித்த வியாபாரி.

PASSIVE. The merchant met by him.
அவனால் சந்திக்கப்பட்ட வியாபாரி.

ACTIVE. The box you made.
நீ செய்த பெட்டி.

PASSIVE. The box made by you.
உன்னால் செய்யப்பட்ட பெட்டி.

குறிப்பு :—எழுவாய், பயனிலைக்குப் பின்னால் வருகிற செயப்படு பொருளானது மேற்கண்ட வாக்கியங்களில் Active Voice -ல் எப்பொழுது முன்னால் வந்துவிட்டதோ அப்பொழுது who, which முதலிய சம்பந்தப்பிரதிப்பெயர்களைக் காட்ட வேண்டிய தவசியமில்லை. தவிர, Passive Voice-லும் முதலிலிருக்கிற செயப்படுபொருள் நீங்கி மற்றவைகள் யாத்திரம் சிறிது மாறுபட்டிருக்கிற விதம் காண்க. இதுவிஷயமாய் 1-வது உதாரணம், இறந்தகாலம் 1, 2, 4 மாதிரிகளில் செயப்பாட்டுவினை வாக்கியங்களை ஒப்பிட்டுப் பார்க்க. இனி who, which என்னும் சம்பந்தப்பிரதிப்பெயர்கள் can, could have என்னும் வினைகளைக்கொண்டு பெயரொச்ச வாக்கியங்கள் அமையும் விதம் பின் வருமாறு.

உதாரணம் 3.

Act. The merchant who can meet my friend.
என்னுடைய சிநேகிதனை சந்திக்கக்கூடிய வியா [பாரி.

Pas. My friend who can be met by the merchant.
வியாபாரியால் சந்திக்கப்படக்கூடிய என் சிநேகி [தன்.

Act. The merchant who could have met my friend.
என்னுடைய சிநேகிதனை சந்தித்திருக்கக்கூடிய [வியாபாரி.

Pas. My friend who could have been met by the merchant.
வியாபாரியால் சந்தித்திருக்கப்படக்கூடிய என் [சிநேகிதன்.

குறிப்பு :—இனி who, which என்னும் சம்பந்தப்பிரதிப்பெயர்கள் வேற்றுமை உருபுகளைச் சேர்த்துக்கொண்டு எவ்வாறு வாக்கியங்களில் உபயோகப்பட்டு வருகின்றனவென்பதை பின்னால் காட்டுகிறோம்.

உதாரணம் 4.

முதலில் who என்னும் சம்பந்தப்பிரதிப்பெயரோடு (Relative Pronoun) வேற்றுமை உருபுகளை முன்னால் அமைத்து வாக்கியங்களை பின்வருமாறு காட்டுகிறோம்.

மாதிரி 1.

வே. 1. The boy who comes.
வருகிற பையன்.

வே. 2. The boy whom I like.
நான் யாரை விரும்புகிறேனோ அந்தப் பையன்.
அதாவது, நான் விரும்புகிற பையன்.

வே. 3. The boy by whom the box was made.
யாரால் பெட்டி செய்யப்பட்டதோ அந்தப் பையன். அதாவது பெட்டி செய்த பையன்.

வே. 4. The boy to whom the merchant gave a cloth.
யாருக்கு வியாபாரி ஒரு வேஷ்டியைக் கொடுத்தானோ அந்தப் பையன். அதாவது, வியாபாரி வேஷ்டி கொடுத்த பையன்.

வே. 5. The boy from whom I received the book.
யாரிடமிருந்து நான் புஸ்தகம் பெற்றுக்கொண்டேனோ அந்தப் பையன். அதாவது, நான் புஸ்தகம் பெற்ற பையன்.

வே. 6. The boy whose book is lost.
யாருடைய புஸ்தகம் இழந்துபோயிற்றோ அந்தப் பையன். அதாவது, புஸ்தகம் இழந்த பையன்.

வே. 7. The prisoner on whom the charge was framed.
யார்மேல் சார்ஜ் ஏற்படுத்தப்பட்டதோ அந்த கைதி. அதாவது, சார்ஜ் ஏற்படுத்தப்பட்ட கைதி.

குறிப்பு:—இனி which என்னும் சம்பந்தப் பிரதிப்பெயரோடு வேற்றுமை உருபுகள் உபயோகத்தில் வருவதை பின்னால் காட்டுகிறோம்.

மாதிரி 2.

வே. 1. The cow which comes.
வருகிற பசு.

வே. 2 The letter which I wrote.
எந்த லெட்டரை நான் எழுதினேனோ அந்த லெட்டர். அதாவது, நான் எழுதின லெட்டர்.

வே. 3. The pen with which I wrote.
எதால் நான் எழுதினேனோ அந்த பேனா.

வே. 4. The pen for which I paid the price.
எதற்கு நான் விலை கொடுத்தேனோ அந்த பேனா. அதாவது, நான் விலை கொடுத்த பேனா.

வே. 5. The tree from which I fell.
எதிலிருந்து நான் விழுந்தேனோ அந்த மரம். அதாவது, நான் விழுந்த மரம்.

வே. 6. The ox whose leg was broken.
எதனுடைய கால் ஒடிபட்டதோ அந்த எருது. அதாவது, கால் ஒடிபட்ட எருது.

வே. 7. The box in which I put my book.
எந்தப் பெட்டியில் நான் என்னுடைய புஸ்தகத்தை வைத்தேனோ அந்தப் பெட்டி. அதாவது, நான் புஸ்தகம் வைத்த பெட்டி.

குறிப்பு:—இவ்விதமாய் 1, 2 மாதிரிகளில் காட்டிய வாக்கியங்களின் அர்த்தத்தை இருவிதமாய்க் காட்டியிருப்பதில், பிந்தி கூறியிருக்கும் அர்த்தமே உபயோகத்தில் வழங்கிவருகிறதைக் கவனிக்க. இனி எதிர்மறைப் பெயரொச்சத்தைப்பற்றிப் பின்னால் விவரிப்போம்.

Negative Relative Verbal Forms.
எதிர்மறைப் பெயரொச்சம்.

தொழிலை மறுக்கிற வினைச்சொல்லே எதிர்மறை என்னப்படும். உதாரணம்: the man who writes என்றால் 'எழுதுகிற மனிதன்' என்று அர்த்தம். இதற்கு எதிரிடையாக 'எழுதாத மனிதன்' என்று ஏற்பட்டால், அப்பொழுது "எழுதாத" என்னும் வினைச்சொல்லானது எதிர்மறைப் பெயரொச்சமாக பாவிக்கப்படும். இப்பேர்ப்பட்டவைகளை இங்கிலீஷ்ப்படுத்தும்பொழுது வாக்கியத்தில் வரும் பிரதான வினைக்கு முன்னால் that does not அல்லது who does not என்பதை முன்னாலமைத்துச் சொல்வதே எதிர்மறைப் பெயரொச்சமாகும். உதாரணமாக: the man who does not write எழுதாத மனிதன் என்பதே. ஆகையால் சாதாரண பெயரொச்ச வாக்கியத்தில் நிகழ்காலத்தில் உபயோகப்படும் பிரதான வினையுடன் who, which என்னுமிரண்டிற்கும் பொதுவாயுள்ள that does not என்பதை முன்னாலமைத்துச் சொல்வதே போதுமானது. தவிர, இத்தன்மையான எதிர்மறை வாக்கியங்கள் நாம் பெயரொச்சத்தின்கீழ் நிகழ்காலத்தில்

காட்டியிருக்கும் 1-வது மாதிரி போன்ற வாக்கியங்களுக்குத்தான் பொருந்துமென்பதைக் கவனிக்கவும். மற்றும் இறந்தகால, எதிர்காலங்களுக்கு that did not, that will not என்பவைகளை முறையே சேர்த்து வாக்கியங்களை அமைத்துக்கொள்க. இனி வினையெச்சத்தைப்பற்றி பின்னால் கூறுவோம்.

Participles.

வினையெச்சம்.

மாதிரி 1.

I have written நான் எழுதியிருக்கிறேன்.—இந்த வாக்கியத்தில், 'எழுதி' என்னும் இறந்தகாலவினையெச்சமானது 'இருக்கிறேன்' என்னும் வினைமுற்றைக் கொண்டு முடிவதால் அதற்கு வினையெச்சமென்று சொல்லப்படும் இதைப்போலவே I am loved நான் நேசிக்கப்படுகிறேன்—போன்ற செயப்பாட்டுவினை வாக்கியங்களிலும் 'loved' என்றதைப்போன்ற இறந்தகாலவினையெச்சம் உபயோகப்படுவதைக் காண்க. மற்றும் நிகழ்கால, எதிர்கால வினையெச்சங்களைப்பற்றி பின்னால் நாம் கூறப்போகும் "வாக்கியங்களின் அமைப்பு" என்ற தலைப்பின் கீழ் பிரத்தியேகமாய் கவனிக்க. இறந்தகால வினையெச்சங்களைப்பற்றி ஆங்கில போதினி 1-வது வாலியம் 97, 98-ம் பக்கங்களில் விவரமாய் காட்டியிருப்பதைக் கவனிக்க.

மாதிரி 2.

I am going நான் போய்க்கொண்டிருக்கிறேன்.—இந்த வாக்கியத்தில் going என்னும் வினையெச்சமானது am என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிகிறது. பொது

வாய் எந்த ஒரு வினைச்சொல்லுடனும் "ing" என்பதை கடைசியில் சேர்த்தால் "கொண்டு" என்னும் அர்த்தம் ஏற்படுகிறது. ஆகையால் இவ்விதம் ing-ல் முடிகிற ஒரு வினையெச்சமானது வாக்கியத்தின் முதலில் காலம் (time), காரணம் (cause or reason), இவைகளையொட்டி உபயோகப்படுகிற காலத்தில் எவ்விதமான அர்த்தம் கொடுக்கிறதென்ற விதத்தைப் பின்னால் காட்டுகிறோம்.

மாதிரி 3.

Time (*காலம்*).

Going along the bazaar I saw a merchant *கடைவழியாகப் போய்க்கொண்டிருந்தபொழுது நான் ஒரு வியாபாரியைக் கண்டேன்.*—இப்பேர்ப்பட்ட வாக்கியங்களில் முதலில் உபயோகித்திருக்கிற going என்னும் வினையெச்சத்திற்கு அர்த்தம் "போய்க்கொண்டிருந்த பொழுது" என்று ஏற்படும். அதாவது, going என்பதற்கு முன்னால் while I was என்னும் வாக்கியம் தொக்கி நிற்பதாய் எண்ணவேண்டும். இனி எந்த இறந்தகால வினையெச்சத்தோடாவது having என்னும் வினையெச்சத்தை முன்னாலமைத்துச் சொன்னால் வாக்கியம் எவ்வாறு அமையுமென்பதைப் பின்னால் காட்டுகிறோம்.

மாதிரி 4.

Having finished my work I went to the office *என்னுடைய வேலையை முடித்தபிற்பாடு நான் ஆபீசுக்கு போனேன்.*—இப்பேர்ப்பட்ட வாக்கியங்களில் finished என்றதைப்போன்ற ஓர் இறந்தகால வினையெச்சத்திற்கு முன்னால் having என்பதை வைத்துச் சொல்லும்போது

"having finished முடித்த பிற்பாடு" என்று அர்த்தம் ஏற்படும். அதாவது, finished என்பதற்கு முன்னால் after I had என்னும் வாக்கியம் தொக்கி நிற்பதாய் எண்ணப்படும். இவ்விதமாய் having என்பதை முன்னால் கொண்ட இறந்தகால வினையெச்சங்களுக்கு Compound Perfect Participle என்று சொல்லப்படும். இனி இப்பேர்ப்பட்டவைகள் செயப்பாட்டுவினைப் பிரயோகத்தில் முதலில் உபயோகப்படுங்கால் எவ்விதமான அர்த்தத்தைக் கொடுக்குமென்பதை பின்னால் காட்டுகிறோம்.

மாதிரி 5

Cause or Reason (காரணம்.)

Being arrested by the Police, he lost his appointment போலீசாரால் பிடிக்கப்பட்டதால் (அல்லது பிடிக்கப்பட்ட காரணத்தால்), அவன் தன்னுடைய வேலையை இழந்தான்.—இப்பேர்ப்பட்ட வாக்கியங்களில் arrested என்பதைப் போன்ற ஒரு இறந்தகால வினையெச்சத்துக்கு முன்னால் being என்னும் வினையெச்சத்தை வைத்துச சொல்லும்போது, "being arrested பிடிக்கப்பட்டதால்" என்று அர்த்தமேற்படும். அதாவது, arrested என்பதற்கு முன்னால், because he was என்னும் வாக்கியம் தொக்கி நிற்பதாய் (அதாவது மறைவாய்) எண்ண வேண்டும். இனி ஒரு இறந்தகால வினையெச்சத்துக்கு முன்னால் having been என்பதை வைத்துச் சொன்னால் வாக்கியம் எவ்வாறு அமையுமென்பதைப்பற்றி பின்னால் கூறுவோம்.

மாதிரி 6.

The clerk, having been convicted by the Magistrate, lost his appointment குமாஸ்தா, மாஜிஸ்டிரேட்டால் தண்டிக்கப்பட்டபடியால், தன்னுடைய வேலையை இழந்தார். — இந்த வாக்கியத்தில் having been convicted என்றதற்கு "தண்டிக்கப்பட்டபடியால்" என்றர்த்தம். அதாவது, convicted என்றதற்கு முன்னால் because the clerk was என்னும் வாக்கியம் தொக்கி நிற்பதாய் எண்ணப்படும் ஆகையால் 5-வது மாதிரியில் காட்டியபடி he என்னும் எழுவாயை பின்னாலமைத்துச் சொல்லும் போது 'arrested' என்னும் ஓர் இறந்தகால வினையெச்சத்துடன் being என்பதை முன்னால் வைத்து செயப்பாட்டுவினையில் வாக்கியம் அமைக்கலாம். ஆனால் 6-வது மாதிரியில் காட்டியபடி 'The clerk' என்னும் எழுவாயை முதலில் அமைத்து செயப்பாட்டுவினை வாக்கியம் அமைக்கும்போது having been convicted என்பதைப் போன்றவைகளை எழுவாய்க்கு அடுத்தாற்போல் அமைத்துச் சொல்லவேண்டுமென்பதை கவனிக்க.

"அவன் வந்தான், அவன் என்னைப் பார்த்தான்" என்ற இந்த இரண்டு வாக்கியங்களையும் ஒன்றுசேர்த்துச் சொல்லும்போது 'அவன் வந்து என்னைப் பார்த்தான்' என்று வாக்கியம் ஏற்படும். இப்பேர்ப்பட்ட வாக்கியங்களை இங்கிலீஷ்படுத்தும்பொழுது 'வந்து, பார்த்தான்' என்னும் இரண்டு வினைகளையும் 'and' என்பதால் சேர்த்துச் சொல்லவேண்டும். அதாவது He came and saw me என்று ஏற்படும். ஆகையால் 'வந்தான்' என்னும் இறந்தகாலவினைமுற்றானது தமிழ் வாக்கியத்தின் சேர்க்கைக்காக 'வந்து' என்று மாறும்போது அதை இறந்த

கால வினையெச்சமாக (Past Participle) எண்ணிவிடக் கூடாது. இனி எதிர்மறை வினையெச்சத்தைப்பற்றிப் பின்னால் கூறுகிறோம். பொதுவாய் நாம் இதுவரை சொல்லிவந்த விஷயங்களை பல தடவைகளிலும் நன்றாய் வாசித்துப்பார்த்து, அப்பால் விஷயங்கள் இன்னதென்பதை ஒரு உபாத்தியாயர் மூலமாக மனதில் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பதை முக்கியமாய் கவனிக்கவேண்டும்.

Negative Dependent Verbal Form.

எதிர்மறை வினையெச்சம்.

The Magistrate, not showing the reason, convicted the accused. மாஜிஸ்டிரேட்டு காரணத்தைக்காட்டாமல் எதிரியைத் தண்டித்தார்.—என்ற வாக்கியத்தில் "காட்டாமல்" என்ற வினையானது எதிர்மறை வினையெச்சமாகும். அதாவது, ஒரு வினைச்சொல்லுடன் 'ஆமல். ஆது' என்னும் அசைகளைச் சேர்த்துச் சொல்லும்போது அது எதிர்மறை வினையெச்சமாகும். அப்பேர்ப்பட்டவைகளை இங்கிலீஷ்ப்படுத்தும்போது மேற்காட்டியபடி show என்னும் வினையைப்போன்றவைகளுடன் ing-ஐச் சேர்ப்பதோடு not என்பதையும் முன்னால் அமைத்துக்கொள்ளவேண்டுமென்பதை கவனிக்க.

Imperative.

ஏவல்.

Do this இதைச்செய், take it அதை எடு.—இந்த வாக்கியங்களில் "செய், எடு" என்னும் கட்டளைப் பொருளுள்ள வினைகளே ஏவல் என்னப்படும். இப்பேர்ப்

பட்ட ஏவல் வாக்கியங்களில் நீ (you) என்னும் எழுவாய் தொக்கிநிற்பதாய் எண்ணப்படும். ஏவல் வாக்கியங்களை அமைத்துச் சொல்லும்போது மேற்காட்டியபடி வினையை முன்னும், செயப்படுபொருளை பின்னும் வைத்துச்சொல்லவேண்டும்.

Verbal Noun.
தொழிற்பெயர்.

The barking of a dog நாய் குலைத்தல் என்பதில் barking (குலைத்தல்) என்பது தொழிற்பெயர். ஒரு வினைச்சொல்லுடன் ing சேர்ந்து அதற்குமுன் the என்ற சாரியையும் (Definite article) பின்னால் of என்னும் உருபிடைச்சொல்லையும் (Preposition) சேர்க்குங்காலையில் ing சேர்ந்த வினைச்சொற்கள் தொழிற்பெயராக வரும். இதுவே தொழிற்பெயர் கண்டுபிடிப்பதற்கு இலகுவான முறை. தவிரவும், நடத்தல் (walking), தூங்குதல் (sleeping) இவைபோன்ற வார்த்தைகளும் தொழிற்பெயராக வரும். உதாரணம்: walking is good என்பதில் walking என்பது இங்கிலீஷ் இலக்கணத்தின்படி வினையெச்சமாக இருந்தபோதிலும் (gerund) பெயர்ச்சொல்லின் தன்மையைக் காட்டுவதால் தொழிற்பெயராகக்கொள்ளல் வேண்டும். பொதுவாய் ing-இல் முடிகிற பல வினைச்சொற்கள் அடியிற் காட்டியபடி வெவ்வேறு அர்த்தங்களுடன் மூன்றுவிதமாய் உபயோகத்தில் வருவது பின்வருமாறு:—

1. He is walking அவன் உலாவிக்கொண்டிருக்கிறான்.
2. Walking along the street தெருவழியாய் உலாவிக் [கொண்டிருக்கும்பொழுது.
3. Walking is necessary உலாவுதல் அவசியம்.

குறிப்பு:—மேற்காட்டிய 1-வது வாக்கியத்தில் walking என்பது வினையெச்சமாக வருகின்றது. 2-வது வாக்கியத்தில் walking என்பது வினையெச்சமாக வந்தபோதிலும், 'உலாவிக் கொண்டிருக்கும்பொழுது' என்று அர்த்தத்தைக் கொடுக்கிறது. 3-வது வாக்கியத்தில் walking என்பது உலாவுதல் என்னும் அர்த்தத்துடன் தொழிற்பெயராக உபயோகப்படுகிற விதம் காண்க. இனி வினையுரிச்சொல்லைப் (Adverb) பற்றி பின்னால் சொல்லுவோம்.

ADVERB.—வினையுரிச்சொல்.

He came immediately அவன் உடனே வந்தான். என்ற வாக்கியத்தில் 'உடனே' என்னும் வினையுரிச்சொல்லானது 'வந்தான்' என்னும் வினைமுற்றைத் தழுவுகிறது. இதே மாதிரியாக ஒரு வினையுரிச்சொல்லானது Adjective (பெயருரிச்சொல்), Preposition (உருபிடைச்சொல்), Conjunction (புணரிடைச்சொல்) முதலியவைகளையும் தழுவுகிறது. பொதுவாய் Adverb மூன்றுவகையாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, (1) Simple Adverb, (2) Interrogative Adverb, (3) Relative Adverb முதலியவைகளே. இவைகளில் நாம் Simple Adverb-ஐப்பற்றி பின்னால் கூறுகிறோம்.

Simple Adverb சாதாரண வினையுரிச்சொல்.—இவ்வகையைச்சேர்ந்த வினையுரிச்சொற்கள், காலம் (Time), இடம் (Place), எண்ணம் (Number), குணம் அல்லது தன்மை (Quality or State), அளவு (Quantity, Extent, or Degree) இந்த சந்தர்ப்பங்களை அநுசரித்து உபயோகத்தில் வரும் விதம் பின்வருமாறு.

1. காலம் (TIME)

I have seen him before நான் அவனை முன்னமே பார்த்திருக்கிறேன் —என்ற வாக்கியத்தில் 'முன்னமே' என்ற வினையுரிச்சொல்லானது have seen என்னும் வினைமுற்றை காலத்தை அநுசரித்து தழுவுகின்றது. இம் மாதிரி உபயோகப்படும் வாக்கியங்களைப் பின்வரும் அப்பியாசபாடங்களில் காட்டுகிறோம்.

அப்பியாச பாடங்கள்.

1. He came yesterday.
   அவன் நேற்று வந்தான்.
2. I will go now.
   நான் இப்பொழுது போவேன்.
3. The merchant will come soon.
   வியாபாரி சீக்கிரம் வருவான்.
4. I will meet him afterwards.
   நான் அவனைப் பின்னால் சந்திப்பேன்.
5. The letter was received to-day.
   லெட்டர் இன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
6. The Supervisor will inspect the school to-morrow
   சூபர்வைசர் பள்ளிக்கூடத்தை நாளையத்தினம் பரீ
   [க்ஷிப்பார்.

குறிப்பு:—மேற்காட்டிய வாக்கியங்களில் yesterday, now, soon, afterwards, to-day, to-morrow போன்ற வினையுரிச்சொற்கள் காலத்தை அனுசரித்து உபயோகப்பட்டிருக்கும் வித்தை கவனிக்க. இனி இடத்தை அனுசரித்து உபயோகத்தில் வரும் விதத்தை பின்னால் காட்டுகிறோம்.

2 இடம் (PLACE).

He has seen the merchant there அவன் வியாபாரியை அங்கே பார்த்திருக்கிறான்—என்ற வாக்கியத்தில் 'there' என்னும் வினையுரிச்சொல்லானது ஓரிடத்தை அனுசரித்து has seen என்னும் வினைமுற்றைத் தழுவுகிறது. ஆகையால் இத்தன்மையான வினையுரிச்சொற்கள் உபயோகத்தில் வரும் விதத்தை, பின்வரும் அப்பியாச பாடங்களில் கவனிக்கவும்.

அப்பியாச பாடங்கள்.

1. Rama is here இராமன் இங்கே இருக்கிறான்.
2. The clerk went out குமாஸ்தா வெளியே போனார்.
3. The Manager was inside of the school மானேஜர் ஸ்கூலின் உட்புறத்திலிருந்தார்.
4. It was near the fort அது கோட்டைக்கு சமீபத்[தில் இருந்தது.

குறிப்பு:—மேற்கண்ட வாக்கியங்களில் here, out, inside, near முதலிய வினையுரிச்சொற்கள் இடத்தை அனுசரித்து உபயோகத்தில் வந்திருப்பதை கவனிக்க. இனி வினையுரிச்சொற்கள் எண்ணிக்கையை அனுசரித்து உபயோகத்தில் வருவதை பின்னால் காட்டுகிறோம்.

3. எண்ணம் (NUMBER.)

I met him twice நான் அவனை இரண்டுதடவை சந்தித்தேன்—என்ற வாக்கியத்தில் 'twice' என்னும் வினையுரிச்சொல்லானது எண்ணிக்கையை அனுசரித்து met என்னும் வினைமுற்றைத் தழுவுகிறது. ஆகையால் இத்தன்மையான வினையுரிச்சொற்களின் உபயோகத்தை பின்வரும் அப்பியாச பாடங்களில் கவனிக்க.

அப்பியாச பாடங்கள்.

1. The teacher came thrice
   உபாத்தியாயர் மூன்று தடவை வந்தார்.

2. The child is crying always
   குழந்தை எப்பொழுதும் அழுதுகொண்டிருக்கிறது.

3. The clerk came again
   குமாஸ்தா மறுபடியும் வந்தார்.

4. Serbians were attacked thirdly [கள்.
   செர்வியர்கள் மூன்றுந்தடவையாய் தாக்கப்பட்டார்

5. I often see him
   நான் அவனை அடிக்கடி பார்க்கிறேன்.

குறிப்பு:—மேற்கண்ட வாக்கியங்களில் thrice, always, again, thirdly, often என்னும் வினையுரிச்சொற்கள் எண்ணிக்கை என்னும் கருத்தை அனுசரித்து உபயோகத்தில் வந்திருப்பதை கவனிக்க. இனி குணம் அல்லது தன்மையை அனுசரித்து உபயோகத்தில் வருவதை பின்னால் காட்டுகிறோம்.

4. மாதிரி, குணம் அல்லது தன்மை

(Manner, Quality or State.)

He walked slowly அவன் மெதுவாய் நடந்தான்—என்ற வாக்கியத்தில் 'slowly' என்னும் வினையுரிச்சொல்லானது தன்மையை அனுசரித்து walked என்னும் வினைமுற்றைத் தழுவுகிறது. ஆகையால் இத்தன்மையான வினையுரிச்சொற்கள் எவ்வாறு உபயோகத்தில் வருகின்றனவென்பதை பின்னால் காட்டுகிறோம்.

அப்பியாச பாடங்கள்.

1. I did it so நான் அதை அப்படிச்செய்தேன்.
2. It is written well அது நன்ருய் எழுதப்பட்டிருக்கிறது.
3. He was ill அவன் சிக்காயிருந்தான்.
4. The work was done badly வேலை கேவலமாய் செய்யப்பட்டது.
5. He may go conveniently அவன் சௌகரியமாய்ப் போகலாம்.

குறிப்பு:—மேற்கண்ட வாக்கியங்களில் so, well, ill, badly, conveniently முதலிய வினையுரிச்சொற்கள் மாதிரி, குணம் தன்மை முதலியவைகளைப் பொருத்து உபயோகத்தில் வந்திருக்கிற விபரமறியவும். இனி அளவைப்பொருத்து உபயோகத்தில் வருகிற விபரம் பின்னுல் காண்க.

1. அளவு (QUANTITY, EXTENT OR DEGREE.)

The merchant was much astonished வியாபாரி அதிக ஆச்சரியப்பட்டான்—என்றவாக்கியத்தில் 'அதிக' என்னும் வினையுரிச்சொல்லானது அளவை அனுசரித்து was astonished என்னும் வினைமுற்றைத் தழுவுகிறது. ஆகையால் இத்தன்மையான வினைச்சொற்கள் எவ்வாறு உபயோகத்தில் வருகின்றனவென்பதை பின்னுல் காட்டுகிரேம்.

அப்பியாச பாடங்கள்.

1. It was partly rectified.
   அது கொஞ்சம் சீர்திருத்தம் செய்யப்பட்டது.
2. He was quite cured.
   அவன் பூரா சொஸ்தமாக்கப்பட்டான்.

3. The commander was a little wounded.
தளகர்த்தன் கொஞ்சம் காயம்பட்டான்.

4. He was suffering very much.
அவன் மிகவும் அதிகமாய் கஷ்டப்பட்டுக்கொண்டி
[ருந்தான்.

குறிப்பு:—மேலே காட்டியிருக்கும் வாக்கியங்களில் partly, quite, a little என்னும் வினையுரிச்சொற்கள் அளவைக் குறிக்கும் சந்தர்ப்பத்தை அனுசரித்து உபயோகப்பட்டிருக்கும் விதம் காண்க. தவிர 4-வது வாக்கியத்தில் very என்னும் வினையுரிச்சொல் much என்னும் வினையுரிச்சொல்லையே தழுவி அப்பால் வினைமுற்றைக் (was suffering) கொண்டு முடிகிற விதம் கவனிக்க. இனி Interrogative Adverb-ஐப்பற்றி பின்னால் விவரிப்போம்.

வினா வினையுரிச்சொல் (Interrogative Adverb.)

வினா வினையுரிச்சொல்லும், காலம், இடம், காரணம், மாதிரி, அளவு இந்த சந்தர்ப்பங்களையொட்டி கேள்விகள் மூலம் உபயோகத்தில் வருகிற விதம் பின்வருமாறு.

1. காலம் (Time).

When did he go அவன் எப்பொழுது போனான்?
How long will you stay there எவ்வளவுகாலம் நீ அங்
கே தங்கியிருப்பாய்?

2. இடம் (Place).

Where did you go நீ எங்கே போனாய்?

3. காரணம் (Reason).

Why did you go நீ ஏன் போனாய்?

4. மாதிரி (MANNER).

How did you go நீ எப்படிப் போனாய்?

5. அளவு (EXTENT OR DEGREE).

How far is the case true எம்மட்டில் அந்த கேஸ் உண்மையாயிருக்கிறது?

குறிப்பு:—1. when, 2. where, 3. why, 4. how, 5. how far என்னும் வினா வினையுரிச்சொற்கள் மேற்கண்ட வாக்கியங்களில் பயனிலையோடு எவ்வாறு தழுவுகின்றனவென்பதை கவனிக்க. இனி சம்பந்த வினையுரிச்சொல்லைப்பற்றி (Relative Adverb) பின்னால் கூறுகிறோம்.

சம்பந்த வினையுரிச்சொல் (RELATIVE ADVERBS).

Where, when என்னும் இவ்விரண்டு வினையுரிச்சொற்களும் முறையே இடம், காலம் முதலிய சந்தர்ப்பங்களை அனுசரித்து இரண்டு வாக்கியங்களை ஒன்று சேர்க்கும் விதம் பின்வருமாறு.

இடம் (PLACE).

This is the house where I reside எங்கே நான் வசிக்கிறேனோ அந்த வீடு இதுதான். அதாவது, நான் வசிக்கிற வீடு இதுதான்.—இந்த வாக்கியத்தில் (1) This is the house, (2) I reside என்ற இந்த இரண்டு வாக்கியங்களையும் where என்னும் சம்பந்த வினையுரிச்சொல்லானது இடத்தை அனுசரித்து இணைத்து நிற்கின்றது. இதேமாதிரி when என்னும் வினையுரிச்சொல்லும் காலத்தை அனுசரித்து சம்பந்த வினையுரிச்சொல்லாய் வந்து இரண்டு வாக்கியங்களை இணைத்து நிற்கின்றது.

அப்பியாச பாடங்கள்.

1. This is the school where my son is reading. என்னுடைய குமாரன் வாசித்துக்கொண்டிருக்கிற பள்ளிக்கூடம் இதுதான்.
2. This is the market where we can purchase the umbrella. நாம் குடை வாங்கக்கூடிய சந்தை இதுதான்.
3. I know the time when he will come. அவன் வரும் நேரம் எனக்குத் தெரியும்.
4. Let me know the time when the merchant will start. வியாபாரி புறப்படுகிற நேரம் எனக்குத் தெரியட்டும்.

குறிப்பு:—மேற்கண்ட வாக்கியங்களின் மத்தியில் இணைக்கப்பட்டிருக்கும் where, when என்னும் வினையுரிச்சொல்லானது முறையே in which, by which என்னும் Relative Pronoun-க்கு சமத்துவமான வார்த்தையாக நின்று உபயோகத்தில் வரும் விதம் காண்க. இது விஷயமாய் சம்பந்தப் பிரதிப்பெயரொச்ச வாக்கியங்களின் கீழ் 4-வது உதாரணத்தை ஒப்பிட்டுப் பார்க்க.

PREPOSITION—உருபிடைச்சொல்.

He came with a knife அவன் ஒரு கத்தியோடு வந்தான்.—என்ற வாக்கியத்தில் a knife என்னும் வார்த்தையோடு with என்னும் Preposition சேராமலிருந்தால் எவ்விதமான அர்த்தமும் ஏற்படாது. ஆகையால் ஒரு உருபிடைச்சொல்லானது பெயர்ச்சொல் அல்லது பிரதி

பெயர்ச்சொற்களை வேற்றுமை உருபுகளால் சம்பந்தப் படுத்தி வாக்கியத்தின் கருத்தை பூர்த்திசெய்கிறது. அடியிற்கண்ட வாக்கியங்கள் வேற்றுமை உருபுகளால் எவ்விதம் சம்பந்தப்பட்டு உபயோகத்தில் வந்திருக்கிறதென்பதை காட்டுகிரும்.

அப்பியாச பாடங்கள்.

1. The merchant came here
வியாபாரி இங்கே வந்தான்.

2. I saw the merchant
நான் வியாபாரியைக் கண்டேன்.

3. He came with the merchant
அவன் வியாபாரியோடு வந்தான்.
It was purchased by the merchant
அது வியாபாரியால் வாங்கப்பட்டது.

4. I sold it for the merchant
நான் அதை வியாபாரிக்காக விற்றேன்.
He gave it to the merchant
அவன் அதை வியாபாரிக்குக் கொடுத்தான்.

5. I received the money from the merchant
நான் வியாபாரியிடமிருந்து பணத்தைப் பெற்றேன்.

6. The merchant's turban was given to the clerk.
வியாபாரியினுடைய தலைப்பாகை அவனுடைய குமாஸ்தாவுக்குக் கொடுக்கப்பட்டது.

7. It was in the box அது பெட்டியில் இருந்தது.
It was on the table அது மேஜைமேல் இருந்தது.

குறிப்பு:—1-2-வது வாக்கியங்களில் கண்ட The merchant என்பது முறையே எழுவாயாகவும், செயப்படுபொருளாக வும் வந்திருப்பதால் அவைகளுக்கு வேற்றுமை உருபு கிடையாது. மற்றும் 3, 4, 5, 6, 7 இந்த வேற்றுமைக ளுக்கு உருபு ஏற்படுத்தி வாக்கியங்களை அமைத்திருக்கிற விதம் காண்க. இதைப்பற்றி ஆங்கிலபோதினி 1-வது வாலியம் 88-வது பக்கத்தையும் பார்க்க. இனி எத்தனை விதமான உருபிடைச்சொற்கள் உண்டென்பதை பின்னால் காட்டுகிறோம்.

உருபிடைச்சொற்களில் (Preposition) 5 விதங்கள் உண்டு. அதாவது:—

1. Simple Preposition. **சாதாரண உருபிடைச்சொல்.**

It was under the table. அது மேஜையின் கீழி ருந்தது.—என்ற வாக்கியத்தில் under என்பது *Simple Preposition.*

2. Double Preposition. **இரட்டை உருபிடைச்சொல்.**

He fell into the well அவன் கிணற்றுக்குள் விழுந் தான்.—என்ற வாக்கியத்தில் into என்பது *Double Preposition.*

3. Compound Preposition. **தொடர் உருபிடைச்சொல்.**

He came without my knowledge அவன் என் தகவலன்றியில் வந்தான்.—என்ற வாக்கியத்தில் without என்பது *Compound Preposition.*

4. PARTICIPIAL PREPOSITION. **எச்ச உருபிடைச்சொல்.**

Considering your service I have appointed you permanently *உன்னுடைய சேர்வீசை கவனித்து நான் உன்னை காயமாய் நியமித்திருக்கிறேன்.—இந்த வாக்கியத்தில்* considering *என்பது 'எச்ச உருபிடைச்சொல்.'*

5. PHRASE PREPOSITION. **புணருருபிடைச்சொல்.**

He gave the petition on behalf of the accused *அவன் எதிரி பக்ஷத்தில் ஒரு மனுவைக் கொடுத்தான்.—என்பதில்* on behalf of *என்பது 'புணருருபிடைச்சொல்.'*

குறிப்பு:—*மேற்காட்டியிருக்கும் ஐந்து வகுப்பைச் சேர்ந்த மற்றும் சொற்களின் பிரயோகத்தைப்பற்றி பிரத்தியேகமாய் கூறுவோம். இனி கூட்டிடைச்சொல்லைப்பற்றி* (Conjunction) *கூறுவது பின்வருமாறு.*

CONJUNCTION.—கூட்டிடைச்சொல்.

கூட்டிடைச்சொல்லானது வார்த்தைகளையும், வாக்கியங்களையும் ஒன்று சேர்க்கும் தன்மையை உடைத்தாயுள்ளது. உதாரணமாக: The table and the chair *மேஜையும் நாற்காலியும்—என்றதில்* table, chair *என்னும் வார்த்தைகளை* and *என்னும்* Conjunction *ஒன்று சேர்த்து நிற்கிறது. இதே மாதிரியாக* I think that he will complete the work *அவன் வேலையை முடிப்பானென்று நான் நினைக்கிறேன்.—என்ற வாக்கியத்தில்* I think *என்ற வாக்கியத்தையும்,* he will complete the

work என்ற வாக்கியத்தையும் that என்னும் conjunction ஒன்றுசேர்த்து நிற்கின்றது. இவ்விதம் வாக்கியங்களைச்சேர்த்து நிற்பதில் that என்பதற்கு முன்னுள்ள வாக்கியத்திற்கு Principal Sentence (முதனிலை வாக்கியம்) என்றும், பின்னுலுள்ள வாக்கியத்திற்கு Dependent Sentence (சார்பு வாக்கியம்) என்றும் சொல்லப்படும். ஆகையால், முதனிலைவாக்கியத்திலும், சார்புவாக்கியத்திலுமுள்ள பயனிலைகள் ஒன்றுக்கொன்று எவ்வித முறைமைகளில் இருக்கவேண்டுமென்ற விஷயத்துக்கு அடியிற்கண்ட விதிகளைக் கூறுகிறோம்.

முதலாவது விதி (RULE 1)

முதனிலை வாக்கியத்திலுள்ள பயனிலையானது இறந்தகாலத்திலிருந்தால், சார்புவாக்கியத்திலுள்ள பயனிலையும் அதே காலத்திலிருக்கவேண்டும். உதாரணமாக: He said that the merchant came அவன், வியாபாரி வந்தானென்று சொன்னான்.—என்ற வாக்கியத்தில் முதனிலை வாக்கியத்திலுள்ள said என்னும் பயனிலை இறந்தகாலத்திலிருப்பது போலவே சார்பு வாக்கியத்திலுள்ள came என்னும் பயனிலையும் இறந்தகாலத்திலிருக்கிறது. இதைப்போன்ற சில மாதிரிவாக்கியங்களைப் பின்வரும் அப்பியாச பாடங்களில் காட்டுகிறோம்.

அப்பியாச பாடங்கள்.

1 He said that the merchant would come.
அவன் அந்த வியாபாரி வருவானென்று சொன்னான்.

2. He said that the merchant should come.
அவன் அந்த வியாபாரி வரவேண்டுமென்று சொன்னான்.

3 He said that the merchant might come.
அவன் அந்த வியாபாரி வரலாமென்று சொன்னான்.

4. He said that the merchant could come.
அவன் அந்த வியாபாரி வரக்கூடுமென்று சொன்னான்.

5. He said that the merchant was coming.
அவன் அந்த வியாபாரி வந்துகொண்டிருந்தானென்
[று சொன்னான்.

6. He said that the merchant had come. [னான்.
அவன் அந்த வியாபாரி வந்திருந்தானென்று சொன்

குறிப்பு :—மேற்காட்டிய சார்புவாக்கியங்களிலுள்ள பயனிலைகள் யாவும் இறந்தகாலத்திலேயே அமைந்திருக்கிறதைக் கவனிக்க. Come என்பதைப்போன்ற ஒரு நிகழ்கால வினைமுற்றுடன் would, could, might முதலிய இறந்தகால வினைகளை முன்னாலமைத்துச் சொன்னால், அது இறந்தகால வினைமுற்றாகவே பாவிக்கப்படும். இனி 2-வது விதியைப் பற்றி பின்னால் கூறுகிறோம்.

இரண்டாவது விதி. (Rule 2).

Principal Sentence முதனிலை வாக்கியத்திலுள்ள பயனிலையானது நிகழ்காலத்திலாவது அல்லது எதிர்காலத்திலாவது இருந்தால், சார்பு வாக்கியத்திலுள்ள (Dependent Sentence) பயனிலையை முக்காலத்திலும் வைத்துச் சொல்லலாம். ஆகையால் நாம் முதலில் முதனிலை வாக்கியத்தின் பயனிலையை நிகழ்காலத்திலமைத்து மற்றும் சார்புவாக்கியத்தின் பயனிலையை முக்காலங்களிலும் அமைத்து பின்வருமாறு காட்டுகிறோம்.

நிகழ்காலம் (Present Tense.)

1. I think that he goes to Madras.
   நான், அவன் சென்னைக்குப் போகிறானென்று
   [நினைக்கிறேன்.

2. I think that he is going to Madras.
   நான், அவன் சென்னைக்குப் போய்க்கொண்டிருக்
   [கிறானென்று நினைக்கிறேன்

3. I think that he has gone to Madras.
   நான், அவன் சென்னைக்குப் போயிருக்கிறானென்று
   [நினைக்கிறேன்.

குறிப்பு :- மேற்கண்ட வாக்கியத்திலுள்ள "நான்" என்னும் எழுவாயை கடைசியில் வைத்தும் சொல்லலாம் அதாவது (அவன் சென்னைக்குப் போகிறானென்று நான் நினைக்கிறேன்) என்றபடி. இனி சார்புநிலை வாக்கியத்தை இறந்த காலத்தில் அமைத்துக் காட்டுகிற விபரம் பின்வருமாறு.

அப்பியாச பாடங்கள்.

இறந்தகாலம்.

1. I think that he went to Madras. [கிறேன்.
   அவன் சென்னைக்குப் போனானென்று நான் நினைக்

2. I think that he was going to Madras.
   அவன் சென்னைக்குப் போய்க்கொண்டிருந்தா
   [னென்று நான் நினைக்கிறேன்.

3. I think that he had gone to Madras.
அவன் சென்னைக்குப் போயிருந்தானென்று நான் நினைக்கிறேன்.

எதிர்காலம்.

1. I think that he will go to Madras.
அவன் சென்னைக்குப் போவானென்று நான் நினைக்கிறேன்.

2. I think that he will be going to Madras
அவன் சென்னைக்குப் போய்க்கொண்டிருப்பானென்று நான் நினைக்கிறேன்.

3. I think that he will have gone to Madras.
அவன் சென்னைக்குப் போயிருப்பானென்று நான் நினைக்கிறேன்.

குறிப்பு:—மேலே கண்ட வாக்கியங்களில் முதனிலை வாக்கியத்தின் பயனிலையை I think என்று நிகழ்காலத்தில் அமைத்துச் சொன்னதுபோலவே I shall think என்று எதிர்காலத்திலும் வைத்துக்கொண்டு மேற்காட்டியபடி முக்காலங்களிலும் சொல்லலாம் என்பதை கவனிக்க. தவிர நாம் 1-வது விதியில் கூறியபடி முதனிலை வாக்கியத்திலுள்ள பயனிலையானது இறந்தகாலத்திலிருந்தால், சார்புநிலை வாக்கியத்திலுள்ள பயனிலையும் இறந்தகாலத்திலேயே இருக்கவேண்டுமென்று அறிந்திருக்கிறோம். ஆனால் 2-வது விதியில் கூறியபடி இறந்தகாலத்தைத்தவிர மற்ற இரண்டு காலங்களிலும் (நிகழ்காலம், எதிர்காலம்) பயனிலையிருந்தால் சார்பு வாக்கியத்திலுள்ள பயனிலை எந்தக் காலத்திலும் இருக்கலாம். அதற்கு எவ்வித நிபந்தனையும் கிடையாது என்பதை மறுபடியும் ஞாபகப்படுத்துகிறோம்.

Sentences connected by the Conjunctions.

கூட்டிடைச்சொற்களால் இணைக்கப்பட்ட வாக்கியங்கள்.

ஒவ்வொருவரும் சில சில சந்தர்ப்பங்களை அனுசரித்து தன் மனதிலுள்ள கருத்தை வாக்கியங்களின் மூலமாக வெளியிடவேண்டியிருக்கிறது. அப்படி வெளியிடும் வாக்கியங்கள் அந்தந்த சந்தர்ப்பத்துக்குத் தகுந்தபடி Conjunction-களால் இணைக்கப்பட்டு பிரயோகத்தில் வருகின்றன. உதாரணமாக: I cannot go there since I am suffering from fever. நான் காய்ச்சலால் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறபடியால் அங்கே போக முடியாது.—இந்த வாக்கியத்தில், போக முடியாததானது ஏதோ ஒரு காரணத்தையிட்டு ஏற்பட்டதாயிருக்கிறது. இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் மேலே இணைத்துக் காட்டியபடி since என்றதைப் போன்ற Conjunction-கள் சில இருக்கின்றன. அவையாவன: because, as, முதலியவைகளே. இவைகளை அடியிற்கண்ட அப்பியாச வாக்கியங்களில் இணைத்துக் காட்டுகிறோம்.

அப்பியாச வாக்கியங்கள்.

1. He was arrested because he was included in the case. அவன் கேசில் சேர்க்கப்பட்டபடியால் அரஸ்டு செய்யப்பட்டான்.

2. He did not attend the meeting as he had no time. அவனுக்கு நேரமில்லாததால் மீட்டிங்குக்குப் போகவில்லை.

குறிப்பு:—மேற்கண்ட வாக்கியங்களில் because என்பதும், as என்பதும் காரணத்தைக் காட்டும் சந்தர்ப்பங்களில் வாக்கியங்களை இணைத்து நிற்கக்கூடியவைகள் என்பதை கவனிக்க. இனி ஒரு நிபந்தனையை அநுசரித்து வாக்கியங்களை இணைக்கக்கூடிய கூட்டிடைச் சொற்களைப்பற்றி பின்னால் விவரிப்போம்.

2. நிபந்தனை (CONDITION.)

I will go there if you allow me நீங்கள் என்னை விட்டால் நான் அங்கே போவேன்—என்ற இந்த வாக்கியத்தில், போகும் விஷயமானது ஒரு நிபந்தனையைப் பொருத்து நிற்கின்றது (அதாவது, நீங்கள் என்னை விட்டால்). இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் மேலே உபயோகித்திருக்கும் if என்பதைப்போன்ற conjunctionகள் சிலவிருக்கின்றன. அவையாவன: unless, provided that முதலியவைகளே. இவைகளின் பிரயோகத்தைப் பற்றி பின்வரும் அப்பியாச வாக்கியங்களைப் பார்க்கவும்.

அப்பியாச வாக்கியங்கள்.

1. He will be convicted unless he gives statement ஸ்டேட்டுமெண்டு கொடுக்காவிட்டால் (கொடுத்தாலொழிய) அவன் தண்டிக்கப்படுவான்.
2. The document will be registered provided that you attest it. நீர் சாக்ஷிகையொப்பமிடும் விஷயத்தில் அந்த தஸ்தாவேஜு ரிஜிஸ்டர் செய்யப்படும்.

3. காரியம் (PURPOSE).

He started that he might see his friend தன்னுடைய சிநேகிதனைக் காணும்பொருட்டு அவன் புறப்பட்

டான்.—என்ற வாக்கியத்தில் புறப்பட்ட விஷயமானது ஒரு காரியத்தின் பொருட்டு ஏற்பட்டதாயிருக்கிறது. இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்ளில் மேலே உபயோகித்திருக்கும் that என்றதைப்போன்ற conjunction-கள் சில இருக்கின்றன. அவையாவன: in order that, so that முதலியவைகளே. இவைகளின் பிரயோகத்தைப்பற்றி பின்வரும் அப்பியாச வாக்கியங்களைப் பார்க்க.

அப்பியாச வாக்கியங்கள்.

1. He went to Madras in order that he might get an appointment. அவன் ஒரு வேலையைப் பெறும் பொருட்டு சென்னைக்குப் போனான்.

2. He will start immediately so that he may join the College. அவன் காலேஜில் சேரும்பொருட்டு உடனே புறப்படுவான்.

குறிப்பு:—In order to என்பதையும் வைத்து மேற்கண்ட மாதிரி வாக்கியங்களமைக்கலாம். உதாரணம்: I came here in order to see my friend என் சினேகிதனைப் பார்க்கும்பொருட்டு நான் இங்கே வந்தேன்.

அடியில் காணும் வார்த்தைகள் இனி எவ்விதமாய் வாக்கியங்களில் இணைக்கப்பட்டு உபயோகத்தில் வருகின்றனவென்பதை தெளிவாய்க் காட்டுகிறோம்.

1. *Both - and.*—இப்பேர்ப்பட்ட வார்த்தைகள் ஏககாலத்தில் இரண்டு விஷயங்களை ஒன்றுசேர்த்து சொல்லும்படியான சந்தர்ப்பங்களில் உபயோகிக்கக் கூடியவைகளாகும். உதாரணம்: He is both clever and intelligent அவன் கெட்டிக்காரனும் புத்தி கூர்மையுடையவனுயுமிருக்கிறான்.

2. *Not only - but also.*—இப்பேர்ப்பட்ட வார்த்தைகள், ஒரு விஷயமானது ஒன்ருேடு நில்லாமல் தொடர்ந்து ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில் உபயோகப்படுகிறது. உதாரணம்: He was not only fined but also dismissed. அவனுக்கு அபராதம் மாத்திரம் விதிக்கப்படவில்லை வேலையினின்றும் தள்ளப்பட்டான்.

3. *Either - or.*—இப்பேர்ப்பட்ட வார்த்தைகள் இரண்டிலொன்று கவனிக்கப்பட வேண்டுமென்ற சந்தர்ப்பங்களில் உபயோகப்படுகின்றன. உதாரணம்: Either Raman or Krishnan must go there. இராமனாவது கிருஷ்ணனாவது அங்கே போகவேண்டும்.

4. *Neither - nor.*—இப்பேரபபட்ட வார்த்தைகள் குறிப்பிட்ட இரண்டு விஷயங்களில் ஒன்றுமே கிடையாது என்னும் சந்தர்ப்பங்களில் உபயோகப்படுகின்றன. உதாரணம்: I have neither the slate nor the pencil. எனக்கு சிலேட்டுமில்லை பென்சிலுமில்லை.

5. *So - as not.*—இப்பேர்ப்பட்ட வார்த்தைகள் ஒரு காரியமானது சாத்தியமில்லாத சந்தர்ப்பங்களில் உபயோகப்படக்கூடியதாகும். உதாரணம்: He is so poor as not to pay even school-fees. அவன் பள்ளிச்சம்பளம் கூட செலுத்தமுடியாத அவ்வளவு எளியவனாயிருக்கிறான். So - as not என்பதைப்போலவே, so - that, as - as, such - that, such - as முதலிய வார்த்தைகளையும் வாக்

கியங்களில் அமைத்துச் சொன்னால் அதே மாதிரி வாக்கியங்கள் அமையுமென்பதை கவனிக்க.

6. *As if.*—இப்பேர்ப்பட்ட வார்த்தைகள் ஒரு விஷயத்தில் பாவனையாயிருப்பதுபோலக் காட்டும் சந்தர்ப்பங்களில் உபயோகப்படுகிறது. உதாரணம்: He pretends as if he is an expert. தான் ஒரு மேதாவியாயிருக்கிறதுபோல அவன் பாசாங்கு பண்ணுகிறான்.

7. *No sooner - than.*—இப்பேர்ப்பட்ட வார்த்தைகள் விஷயம் ஏற்பட்ட மாத்திரத்தில் கவனிக்கும் சந்தர்ப்பங்களில்உபயோகப்படக்கூடியவைகளாகும். உதாரணம்: No sooner did he hear the news, than he started for Madras. அவன் சங்கதியைக் கேட்டவுடனே சென்னைக்குப் புறப்பட்டான்.—இந்த வாக்கியத்தைப்போலவே, scarcely - when, hardly - before முதலிய வார்த்தைகளையும் வாக்கியங்களில் அமைத்துச் சொன்னால் அதே மாதிரி வாக்கியங்கள் அமையுமென்பதைக் கவனிக்க.

குறிப்பு :—மேலே காட்டியிருக்கும் இரட்டிப்பு வார்த்தைகளில் ஒன்றின் உதவியில்லாமல் மற்றொன்றை உபயோகிக்கமுடியாது. அதாவது கடைசியில் காட்டியிருக்கிற மாதிரிப்படி No sooner என்று அமைத்து வாக்கியம் ஆரம்பித்தால் அடுத்த படியில் than என்பது கட்டாயம் வரவேண்டுமென்பதை கவனிக்க. இனி தனிப்பட்ட வார்த்தைகள் வாக்கியங்களில் எவ்விதமாய் பிரயோகப்படுகின்றன வென்பதை பின்னால் காட்டுகிறோம்.

8. *Though.*—உதாரணம்: He always speaks truth though he is poor அவன் ஏழையாயிருந்தாலும் எப்பொழுதும் உண்மை பேசுகிறுன்.

9. *Although.*—உதாரணம்: He helps others although he is sick அவன் வியாதியாயிருந்தபோதிலும் மற்றவர்களுக்கு உதவி செய்கிறுன்.

10. *However.*—உதாரணம்: He will not assist others however rich he may be அவன் எவ்வளவு பணக்காரனு யிருந்தபோதிலும் மற்றவர்களுக்கு உதவி செய்யமாட்டான்.

11. *For.*—உதாரணம்: He cannot walk, for he is very weak அவன் மிகவும் துர்ப்பலமாயிருப்பதால் நடக்கமுடியவில்லை. For என்பதைப் போலவே as, since, inasmuch, because முதலிய வார்த்தை களை வாக்கியங்களில் அமைத்துச் சொன்னுலும் மேற்காட்டிய வாக்கியத்தைப்போலவே அமையு மென்பதை கவனிக்க.

12. *According to.*—உதாரணம்: According to your circular I have submitted the account உங்க ளுடைய சர்குலர் பிரகாரம் நான் கணக்கு அனுப் பியிருக்கிறேன்.

13. *As well as.*—உதாரணம்: Rama should work as well as Krishna கிருஷ்ணனைப்போலவே இராம னும் வேலை செய்யவேண்டும்.

14. *Had.*—உதாரணம்: Had you gone there, you would have seen my friend நீ அங்கே போயி ருந்தால் என் சிநேகிதனைப் பார்த்திருப்பாய்.— இந்த வாக்கியத்தை if என்னும் வார்த்தையால்

அமைத்தும் சொல்லலாம். உதாரணம்: If you had gone there, you would have seen my friend என்பதே.

15. *Had not.*—உதாரணம்: Had not the merchant helped me in time I would have incurred much loss வியாபாரியானவன் சரியான காலத்தில் எனக்கு உதவி செய்யாதிருந்தால் நான் அதிக நஷ்டமடைந்திருப்பேன். தவிர, If the merchant had not helped me in time என்றும் சொல்லலாம்.

16. *Were.*—உதாரணம்: Were I in his place I would spend much நான் அவன் ஸ்தானத்திலிருந்தால் அதிகம் செலவழிப்பேன்.—இந்த வாக்கியமானது If I were in his place I would spend much என்ற வாக்கியத்திற்கு சமானமானதாகும்.

INTERJECTION.—வியப்பிடைச்சொல்.

இந்த வியப்பிடைச்சொல்லானது விசேஷமாய் வாக்கியங்களில் உபயோகப்படக்கூடியதல்ல. ஆகையால் இதைப்பற்றி விரிவாய்க் கூறவில்லை. இத்தகைய சொற்களின் மாதிரிகளாவன: Oh, Ah, Alas, Hurrah முதலியவைகளே. இனி வாக்கியங்களின் அமைப்பைப்பற்றி பின்னால் கூறுவோம்.

FORMATION OF SENTENCES.

வாக்கியங்களின் அமைப்பு.

எழுவாயும் பயனிலையும் கூடியது ஒரு வாக்கியமாகும். வாக்கியங்கள் மூன்று வகைப்படும். அவையாவன:—

1. தனிநிலை வாக்கியம் (*Simple Sentence*).
2. தொடர்நிலை வாக்கியம் (*Compound Sentence*).
3. சங்கர வாக்கியம் (*Complex Sentence*).

இனி ஒவ்வொரு வாக்கியங்களைப்பற்றியும் அடியில் விபரமாய்க் கூறுகிறோம்.

SIMPLE SENTENCE—தனிநிலை வாக்கியம்.

1

ஒரே எழுவாயும் ஒரே பயனிலையும் கொண்டது தனிநிலை வாக்கியமாகும். ஆனால் பயனிலையானது transitive verb-ஆக வரும் விஷயத்தில் செய்ப்படுபொருளை ஏற்றுக்கொண்டும் வரும். உதாரணம்: 'A boy cut a tree ஒரு பையன் ஒரு மரத்தை வெட்டினான்-என்ற வாக்கியத்தில், a boy என்பது எழுவாய், cut என்பது பயனிலை, a tree என்பது செயப்படுபொருள் என்பதை கவனிக்க.

அப்பியாச பாடங்கள்.

1. Cats kill rats.
   பூனைகள் எலிகளைக் கொல்லுகின்றன.
2. He saw a man.
   அவன் ஒரு மனிதனைக் கண்டான்.

3. Govindan shot a tiger.
   கோவிந்தன் ஒரு புலியைச் சுட்டான்.

4. We took the bag.
   நாங்கள் பையை எடுத்தோம்.

குறிப்பு:—பெயர்ச்சொல், பிரதிப்பெயர்ச்சொல் இவைகளே ஒரு வாக்கியத்தின் எழுவாய் ஸ்தானத்தில் அடிக்கடி உபயோகப்படுகின்றன. ஆனால் Gerund, Infinitive, Phrase, Clause முதலியவைகளும் எழுவாயாக அபூர்வத்தில் வருவதும் உண்டு. இனி எழுவாயின் அடைமொழிகளாக வரக்கூடியவைகளைப்பற்றி பின்னால் காட்டுகிறோம்.

2

எழுவாயின் அடைமொழிகளாக (adjuncts to the subject) பெயருரிச்சொல்லும், பிரதிப்பெயரும் உபயோகத்தில் வருகின்றன. உதாரணம்: A clever boy shot a tiger ஒரு கெட்டிக்காரப் பையன் ஒரு புலியைச் சுட்டான் என்ற வாக்கியத்தில், boy என்னும் எழுவாய்க்கு a clever என்னும் adjective அடைமொழியாக வருகின்றது.

அப்பியாச பாடங்கள்.

1. A *good* man loves truth.
   ஒரு நல்ல மனிதன் உண்மையை விரும்புகிறான்.

2. A *bad* man hates it.
   ஒரு கெட்ட மனிதன் அதை வெறுக்கிறான்.

3. *My* mother bought mangoes.
   என் தாயார் மாம்பழங்களை வாங்கினாள்,

4. *His* father loved me.

அவனுடைய தகப்பனார் என்னை நேசித்தார்.

குறிப்பு:—மேற்காட்டிய வாக்கியங்களில் good, bad என்ற பெயருரிச்சொற்களும், my, his என்ற 6-வது வேற்றுமை பிரதிப்பெயரும் அடைமொழிகளாக வந்திருப்பதைக் கவனிக்க. ஆனால் Participle, Gerund முதலியவைகளும் அபூர்வமாய் அடைமொழிகளாக வரக்கூடும். இனி பயனிலைக்கு அடைமொழிகளாக வரக்கூடியவைகளைப்பற்றி பின்னால் காட்டுகிறோம்.

3

ஒரு வாக்கியத்தில் பயனிலையின் அடைமொழிகளாக 1. Adverb (வினையுரிச்சொல்), 2. Gerundial Infinitive (வினையெச்சம்), 3. Adjective (பெயருரிச்சொல்) 4. Preposition with object (உருபிடைச்சொல்லையுடைய செயப்படுபொருள்) இவைகள் வரக்கூடும். இவைகளின் பிரயோகத்தை பின்கண்ட அப்பியாச பாடங்களில் கவனிக்க.

அப்பியாச பாடங்கள்.

1. He walked *slowly* அவன் மெதுவாய் நடந்தான்.
2. I went *to see him* நான் அவனை பார்க்கப்போனேன்.
3. He worked *hard* அவன் கடின வேலை செய்தான்.
4. We sat *on the bench* நாங்கள் பெஞ்சின்மேல் உட்கார்ந்தோம்.

குறிப்பு:—மேற்கண்ட வாக்கியங்களில் slowly என்னும் Adverb-உம், to see என்னும் Gerundial Infinitive-உம், hard என்னும் Adjective-உம், on the bench என்னும் Preposition with object-உம், பயனிலையின் அடைமொழிகளாக வந்தி

ருப்பதை கவனிக்க. இனி செயப்படுபொருளுக்கு அடைமொழிகளாக வருவதைப்பற்றி பின்னால் காட்டுகிறோம்.

4

எந்தெந்த சொற்கள் எழுவாய்க்கு அடைமொழிகளாக வருகின்றனவோ அவைகளே செயப்படுபொருளுக்கும் வருகின்றன.

அப்பியாச பாடங்கள்.

1. I like *a fine* chair
   நான் ஒரு நேர்த்தியான நாற்காலியை விரும்புகிறேன்.
2. A man cut *a large* tree
   ஒரு மனிதன் ஒரு பெரிய விருக்ஷத்தை வெட்டினான்.
3. They love *my* father
   அவர்கள் என்னுடைய தகப்பனாரை நேசிக்கிறார்கள்.
4. She hates *her* daughter
   அவள் தன் குமாரத்தியை வெறுக்கிறாள்.

குறிப்பு :—மேற்கண்ட வாக்கியங்களில் fine, large என்ற பெயருரிச்சொற்களும், my, her என்ற 6-வது வேற்றுமை பிரதிப்பெயர்ச்சொற்களும் செயப்படுபொருளுக்கு அடைமொழிகளாக வந்திருப்பதை கவனிக்க.

5

சில பெயரொச்ச வாக்கியங்களும் தனிநிலை வாக்கியங்களில் அடைமொழிகளாக வருகின்றன. உதாரணமாக: The peon working in the office was arrested by the Police. ஆபிசில் வேலை செய்துகொண்டிருந்த சேவகன்

போலீசாரால் கைதி செய்யப்பட்டான் என்ற வாக்கியத்தில் working in the office என்ற முற்றுவினையில்லாத ஒரு எச்ச வாக்கியமானது the peon என்ற எழுவாய்க்கு அடைமொழியாக வருகிறது.

அப்பியாச பாடங்கள்.

1. The boy *attending in the class* was called up by his father. வகுப்பில் கவனித்துக்கொண்டிருந்த பையன் தன் தகப்பனாரால் கூப்பிடப்பட்டான்.

2. The man *talking with you* is my friend. உங்களோடு பேசிக்கொண்டிருக்கிற மனிதன் என் சிநேகிதன்.

3. The merchant *purchasing the articles* came to me. சாமான்களை வாங்கிக்கொண்டிருக்கிற வியாபாரி என்னிடம் வந்தான்.

குறிப்பு:—மேற்கண்ட வாக்கியங்களிலுள்ள attending, talking, purchasing முதலியன சேர்ந்த வாக்கியங்கள் முற்றுவினையாயில்லாத எச்ச வாக்கியங்களாக வருவதால் அது simple sentence ஆகின்றது. இதே மாதிரி செயப்பாட்டுவினையில் வரும் பெயரெச்ச வாக்கியங்களையும் simple sentence-இல் வைத்து அமைக்கலாம். உதாரணமாக: The order *given to the contractor* was cancelled. கண்டிராக்டருக்கு கொடுக்கப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்பட்டது. என்ற வாக்கியத்தில் given என்பது யாதொரு முற்றுவினையாயிராமல் எச்சமாக உபயோகப்படுவதால் simple sentence ஆகின்றது என்பதை கவனிக்க.

6

சில வினையெச்ச வாக்கியங்களும் simple sentence-உடன் அடைமொழிகளாக வருகின்றன.

அப்பியாச பாடங்கள்.

1. *Seeing the tiger*, he ran away.
   புலியைக் கண்டு, அவன் ஓடிப்போனான்.
2. *Finding the mistake*, he corrected it.
   தப்பிதத்தைக்கண்டு, அவன் அதை திருத்தினான்.
3. *Hearing the noise*, he opened the door.
   சத்தத்தைக் கேட்டு, அவன் கதவைத் திறந்தான்.

குறிப்பு :—மேற்கண்ட வாக்கியங்களில் seeing the tiger, finding the mistake, hearing the noise போன்ற வினையெச்ச வாக்கியங்களும் simple sentence-இல் அடைமொழிகளாக வரலாம்.

7

Having finished the work, the contractor submitted the bill. வேலையை முடித்துவிட்டு கண்ட்ராக்டர் பில்லை அனுப்பினார்.—என்ற வாக்கியத்தில் having finished போன்ற இறந்தகால வினையெச்சங்களும் (Compound Perfect Participle) ஒரு simple sentence-இல் அடைமொழிகளாக வரலாம்.

அப்பியாச பாடங்கள்.

1. *Having defeated the enemy*, they captured the town. சத்துருவை தோற்கடித்து, அவர்கள் அந்தப் பட்டணத்தைப் பிடித்தார்கள்.

2. *Having filed the record*, the plaintiff asked for adjournment. ரிக்கார்டை தாக்கல் செய்துவிட்டு வாதி வாய்தா கேட்டான்.

3. *Having executed the document*, we asked money. தஸ்தாவேஜு எழுதிக் கொடுத்துவிட்டு நாங்கள் பணத்தைக் கேட்டோம்.

குறிப்பு:—மேலே நாம் காட்டியிருக்கிற 7 விதமான மாதிரிகளிலும் ஒரே எழுவாயும், ஒரே பயனிலையும் கொண்டு வாக்கியங்கள் அமைத்திருக்கிறதை கவனிக்க. பயனிலையானது எப்பொழுதும் முடிந்த வினையாயிருக்கவேண்டும். அதன்ணியில் நாம் 5, 6, 7 இந்த மாதிரிகளில் காட்டியிருக்கிறபடி முற்றுவினையல்லாத எச்ச வாக்கியங்கள் முழு அர்த்தத்தைக் கொடுக்கக்கூடிய வாக்கியங்களாகமாட்டாது. அப்பேர்ப்பட்டவைகள் அடைமொழிகளாக மாத்திரம் வரலாம். இதுவரை நாம் Simple Sentence-இன் தன்மையைப்பற்றிக் கூறிவந்தோம். இனி Compound Sentence-ஐப்பற்றி (தொடர்நிலை வாக்கியம்) பின்னால் கூறுகிறோம்.

COMPOUND SENTENCE.

தொடர்நிலை வாக்கியம்.

1

பல பகுதி வாக்கியங்கள் (clauses) சம கூட்டிடைச் சொற்களால் (co-ordinative conjunctions) இணைக்கப் பட்டாகிலும், ஒரு எழுவாயானது பல பயனிலைகளைக் கொண்டாகிலும், பல எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டாகிலும் உபயோகத்தில் வருவது தொடர்நிலை வாக்கியமாகும். உதாரணம்: I saw him but he did

not see me. நான் அவனைக் கண்டேன் ஆனால் அவன் என்னைக்காணவில்லை—என்ற வாக்கியத்தில் I saw him, he did not see me என்ற இரண்டு பகுதி வாக்கியங்களை but என்னும் சம கூட்டிடைச்சொல்லானது சேர்த்து வைக்கின்றது. இதே மாதிரி பின்னும் பல சம கூட்டிடைச்சொற்கள் (co-ordinative conjunctions) சில பகுதி வாக்கியங்களை ஒன்று சேர்த்துக்கொண்டு தொடர்நிலை வாக்கியமாக உபயோகத்தில் வருவதை பின்வரும் அப்பியாச பாடங்களில் காட்டுகிறோம்.

அப்பியாச பாடங்கள்.

1. You must confess your fault, *otherwise* you will be punished. நீ உன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொள்ளவேண்டும், அல்லாவிட்டால் தண்டிக்கப்படுவாய்.

2. He was convicted, *and therefore* he preferred an appeal. அவன் தண்டிக்கப்பட்டான், ஆகையால் அவன் அப்பீல் செய்தான்.

3. He passed his examination, *for* he studied well. அவன் பரீக்ஷை தேறினன், ஏனெனில் அவன் நன்றாய் வாசித்தான்.

குறிப்பு:—மேற்கண்ட வாக்கியங்களில் otherwise, and therefore, for முதலிய சம கூட்டிடைச்சொற்கள் இரண்டு பகுதி வாக்கியங்களை ஒன்று சேர்த்து தொடர்நிலை வாக்கியமாகச் செய்கின்றது. பின்னும் சம கூட்டிடைச்சொற்களான both - and, not only - but also, neither - nor, either - or, as well as முதலியவைகளின் பிரயோகத்தை கூட்டிடைச்சொற்களின்கீழ் சொல்லியிருப்பதை கவனிக்க.

இருந்தால், தனிநிலை வாக்கியத்தில்தான் ஒரே எழுவாயும், ஒரே பயனிலையுமிருக்கும். ஆனால் தொடர்நிலை வாக்கியத்திலோ, ஒரு எழுவாய்க்கு பல பயனிலைகள் வரக்கூடும். ஆகையால் நாம் ஒரு எழுவாய்க்கு இரண்டு பயனிலைகள் வரக்கூடியதை பின்னால் காட்டுகிறோம்.

2

நான் போனேன்.	நான் அவனை அழைத்தேன்.
I went.	I invited him

மேற்கண்ட இரண்டு வாக்கியங்களிலும் 'நான்' என்னும் எழுவாயானது ஒரே மாதிரியாயும், பயனிலைகள் மாத்திரம் வெவ்வேறு விதங்களாயுமிருக்கின்றன. ஆகையால் மேற்கண்ட வாக்கியத்தை ஒரே எழுவாயும் இரண்டு பயனிலைகளுமுடைய வாக்கியமாகச் செய்யலாம். அதாவது, 'நான் போய் அவனை அழைத்தேன்' என்று அமைக்கலாம். இவ்விதம் அமைக்கும்போது இரண்டாவது வாக்கியத்தில் வரும் எழுவாயாகிய I என்பதை நீக்கி and என்பதைச் சேர்த்து வாக்கியம் அமைக்கவேண்டும். அப்படியானால், I went and invited him என்று வாக்கியம் அமையும். இது விஷயமாய் பின்வரும் அப்பியாச பாடங்களைக் கவனிக்க.

அப்பியாச பாடங்கள்.

1. அவன் கடைக்குப்போய் (அவன்) காய்கறிகளை வாங்கினான்.

He went to bazaar and (he) purchased vegetables.

2. வியாபாரி வந்து (வியாபாரி) என்னைக் கண்டான்.

The merchant came and (the merchant) saw me.